விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி 27 திங்கட்கிழமை (12.09.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 267

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# புலிகளை பேச்சுக்கு அழைக்குமாறு சர்வதேசத்தைக் கோருகிறது அரசு

## இணைத்தலைமை நாடுகளிடம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை அரசுடனான நேரடிப்பேச்சுக்களில் ஈடுபட வருமாறு சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் பிரதிஇராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா ரொக்காவைச் சந்தித்த அரச சமாதானச் செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபால இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிடவும், ஜனநாயகத்தை மதிப்பதற்கும், சர்வதேச நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். அத்துடன் பேச்சு மேசைக்கு விடுதலைப் புலிகளை அழைப்பதற்கு சர்வதேச சமூகம் தலையிட வேண்டும். அத்துடன் இலங்கையின் நிரந்தர சமாதனம் ஏற்படுவதற்கும் வேண்டிய உதவிகளையும் சர்வதேசம் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் எனபன ஐக்கியநாடுகளின் வருடாந்த அமர்வில் இவ்விடயத்தினை முன்னெடுக்க வேண்டும்.

நோர்வேயின் ஏற்பாட்டில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை கைவிடும் நோக்கமோ அல்லது நோர்வேயைத்தவிர்க்கும் நோக்கமோ அரசாங்கத்துக்கு இல்லை. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் தேர்தல் அறிக்கை செப்.17ல் வெளியிடப்படவுள்ளது

### திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கை செப்ரெம்பர் 17ஆம் திகதி நடைபெறும் அக்கட்சியின் மாநாட்டில் வெளியிடப்படவுள்ளது.

இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு, இளைஞர் வேலை வாய்ப்பு, அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு, விவசாயிகள் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களில் ஐ.தே.க நிலை அதில் உள்ளடக்கப்படும்.

அமைதிக்கான தேர்தல் அறிக்கையாகவும் சமாதானப் பேச்சுக்கான முன்னேற்றமாகவும், மக்கள் அனைவரும் எதிர்பார்க்கும் அறிக்கையாகவும் இது அமைந்திருப்பதாக ஐ.தே.கவின் துணைப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். ஐ.தே.க. ஆட்சிப் பொறுப்பேற்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் குறித்த பேச்சுக்கள் மீள தொடங்கப்பட்டு முழு அளவில் செயற்படுத்தப்படும் என தெரிவித்தார். (ச-4)

## வெலிக்கந்தைப் பிரதேசத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தைப் பிரதேசத்தில் நேற்று நண்பகல் இரண்டு தமிழ் இளைஞர்கள் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

இறந்தவர்கள் முத்துக்கல்லைச் சேர்ந்த முத்துராஜா முரளீதரன் (வயது 28) மற்றும் கரபொலவைச் சேர்ந்த குலசேகரம் உதயகுமார் (வயது 19) என அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

முத்துராஜா முரளீதரன் வயலுக்குச் சென்ற சமயம் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் வெலிக்கந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முரளீதரன் கொலை தொடர்பாக விசாரிக்கச் சென்றபோது அவரது சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 800 மீற்றர் தொலைவில் இருக்கும் கரபொல குளக்கரையோரம் குலசேகரம் உதயகுமாரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீன்பிடிக்கச் சென்ற சமயம் உதயகுமார் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-4)

## சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு 18 இல் அவசரமாகக் கூடுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான முறுகல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளநிலையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு எதிர்வரும் 18ஆம் திகதி அவசரமாக கூடுகிறது.

இக் கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை கட்சியில் இருந்து நீக்குதல், புதிய ஜனாதிபதி வேட்பாளரை நியமிப்பது என்பன தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப் படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் உருவாக்கிய ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு நீடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இக்கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க்கிலிருந்து திரும்பியவுடனேயே இக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

நியூயோர்க் புறப்படும் முன்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர்கள் பொதுக்கட்டமைப்பு செயற்படவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாக சந்திரிகா கூறியிருந்தார்.

ஜே.வி.பி-மகிந்த ராஜபக்ஷ உடன்படிக்கையை எதிர்க்கவே இக் கூட்டங்களை சந்திரிகா கூட்டியுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ற)

## புலிகளின் பகுதிக்குள் நுழைந்த 3பொலீஸார் தமிழீழ காவல்துறையினரால் தடுத்துவைப்பு

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்த மூன்று பொலிஸாரினை விடுதலைப்புலிகள் கைதுசெய்துள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலான சந்தேக நபர் ஒருவரை விசாரணை செய்யும் பொருட்டு மன்னார் சிலாபத்துறை பகுதிக்குச் சென்ற பொழுது விடுதலைப்புலிகளால் பிடித்துச்செல்லப்பட்ட மூன்று பொலிஸாரும் தமிழீழ காவல்துறையினரின் பொறுப்பில் இருப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்செய்யப்படவிருப்பதாக விடுதலைப்புலிகளின் ஊடகத்துறை இணைப்பாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் உள்ள அரிப்பு என்ற பிரதேசத்தில் சிறுவர்துஷ்பிரயோகம் இடம் பெற்றுவருவதாக கிடைத்த முறைப்பாட்டினையடுத்து விசாரணைகளுக்காகச் சென்ற சிறுவர் பாதுகாப்புப்பிரிவைச் சேர்ந்த சிவில் அதிகாரியொருவரும் அவருடன் சென்ற ஐந்து பொலிஸார் மற்றும் இது தொடர்பில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதில் சிக்கல்நிலை

(கொழும்பு)

2006ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கவேண்டுமெனில் ஆகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்னர் அது தொடர்பான அனுமதி அமைச்சரவையில் பெறப்படவேண்டும்.

இந்த நிலையில் இதுவரையில் அனுமதி பெறப்படவில்லை. இதன் காரணமாக எதிர்வரும் நவம்பர் மாதம் வரவு செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது.

இதற்குப் பதிலாக மூன்று மாதங்களுக்குரிய இடைக்கால வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பாராளுமன்ற அமர்வுகளை நடத்துவதில்லை என்பதற்கான பேச்சுவார்த்தைகளும் தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
EXPOAIR
your friend in the skies...
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்கள் ஏற்கும் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு ஒன்றிணைக!

## அனைத்து கட்சிகளுக்கும் ரணில் அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஏற்றுக்கொள்ளும் கொள்கைகளைச் செயற்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மக்கள் ஏற்றுக்கொள்ளும் கொள்கைகளை செயற்படுத்துவதன் மூலம் நாட்டினை என்றுமில்லாதவாறு புதிய பாதையில் இட்டுச்செல்ல முடியும். இலங்கையை முன்னேற்றமடைந்த நாடாக மாற்றுவதற்கு நான் உரிய நடிவடிக்கையை எடுக்கவுள்ளேன்.

சமாதான செயற்பாடுகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிகும் இடையே இணக்கம் காணப்பட்ட பல விடயங்கள் உள்ளன எனவும் சுட்டிக்காட்டினார். (ற-4)

## பிளாஸ்ரிக் போத்தல்

(கோப்பாய்)

பிளாஸ்திக் வெற்றுப் போத்தல்க்ள் மீள் சேகரிப்பு நடவடிக்கையில் பாடசாலையில் சிறுவர் சுற்றாடல் கழகம், சுற்றாடல் முன்னோடிப் படையணி போன்ற அமைப்புகள் ஊடாக சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள்ன.

பாடசாலையிலும் சுற்றாடலில் காணப்படுகின்ற இப் பொருட்களைப் பாடசாலைகளில் சேகரித்து வைக்குமாறும் இப் பொருட்கள் பிரதேசச் சுற்றாடல் உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்படும் எனவும் கூடுதலாகச் சேகரிக்கும் பாடசாலைகட்கு சுற்றாடல் பதக்கங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-79)

## நூலகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரம் நூலகக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை வலிவடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி ஸ்ரீ மாணிக்கத்தின் தலைமையில் முற்பகல் 10.00 மணிக்கு அளவெட்டி பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை கோட்டக்கல்வி அலுவலக அதிகாரி ச.கைலாசநாதன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் பு.புண்ணியசீலன், மல்லாகம் மகாவித்தியாலய அதிபர் மா.நகேந்திரசீலன், அளவெட்டி அருணோதயக் கல்லூரி உப அதிபர் வி.சிவராசா, தெல்லிப்பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ந.சச்சிதானந்தம்,

வலி வடக்கு பிரதேசசபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சிவயோகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கு ஆசியுரையினை அருட்கவி சி.விநாசித் தம்பியும் அருட்தந்தை நேசநாயமும் வழங்கவுள்ளனர். (த-9)

## ஊழல் புரியும் கிராம சேவையாளரை இடமாற்றம் செய்யக் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு, உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 5 வருடங்களுக்கு மேலாகக் கிராம சேவையாளராகக் கடமையாற்றி வரும் ஒருவர் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதால் அவரை அவ்விடத்திலிருந்து மாற்றுமாறு கோரி உடுத்துறை மக்கள், இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் மக்கள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபருக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளார்கள்.

குறிப்பிட்ட கிராம சேவையாளர் தனது பெயரிலும் அரசாங்க ஊழியரான அவரது மனைவி பெயரிலும் 5000ருபா சுனாமிக் கொடுப்பனவைப் பெற்றுவருவதாகவும், 5 சுனாமி முத்திரைகளுக்கான கொடுப்பளவுகளைப் பெற்று வருவதாகவும், இது தவிர ஊரைவிட்டு சென்றுள்ளவர், மரணமடைந்துள்ளவர் ஆகிய இருவரது பெயரிலும் கொடுப்பனவுகளைப் பெற்று வருவதாகவும், அவரது நண்பர் ஒருவருக்கு வேறொருவது பெயரில் பணம் பெற்றுக்கொடுப்பதாகவும், வெளிநாட்டில் வசிப்பவர்கள் பெயரில் கூட கொடுப்பதைகளைப் பெற உதவி செய்வதாகவும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, தவறான வழியில் பெறப்படும் நிவா ரணங்களைப் பெறுபவர்களது பெயர், கணக்கு இலக்கம் முதலியனவும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இம் மகஜரின் பிரதிகள் கடற் புலிகளின் சிறப்புத் தளபதி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், கடற் புலிகளின் தளபதி, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர், வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர், வடமராட்சி கிழக்கு செயலணிக்குழு ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (து-97)

## இராசி பலன்

**12.09.2005**
**(ஆவணி 27, திங்கட் கிழமை)**
**நவமி முன்னிரவு 10.21 மணிவரை**
**மூலம் முன்னிரவு 9.48 மணிவரை**
**இராகுகாலம் 7.33 - 9.03 மணிவரை**
**சுபநேரம்12.03-1.33 மணிவரை**
**ஆவணி மூலம்**

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், பிதா சிந்தை, பிரயாணம், கட்டுப்பாடு. |
| இடபம் | அபகீர்த்தி, காரிய இடையூறு, போசன சுகம், உடல்நலக் குறைவு. |
| மிதுனம் | களஸ்திர நன்மை, விருந்துபசாரம், காரிய அனுகூலம், நல்லசெய்தி. |
| கடகம் | சுவாரஸ்யமான நிலை, எடுத்த காரியம் கைகூடும், உடல்நலம், போசன சுகம். |
| சிங்கம் | குடும்பக் கவலை, வியாபார விருத்தி, காரிய தாமதம், பூர்வ புண்ணிய கருமம். |
| கன்னி | மாதாசுகம், மனச்சஞ்சலம், சுபசெலவு, காரிய சிந்தை. |
| துலாம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, தனவருவாய், அன்னியர் சந்திப்பு. |
| விருச்சிகம் | தனவிரயம், உணர்ச்சிவசப்படுதல், முயற்சி தாமதம், அதிகாரம். |
| தனு | பெருமையடைதல், நல்ல முயற்சி, விருந்துபசாரம், பிரயாணம். |
| மகரம் | இடமாற்றம், சயனசுகக் குறைவு, வீண் பகை, சுபசெலவு. |
| கும்பம் | எதிர்பாராத நன்மை, காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு, தனவருவாய். |
| மீனம் | உற்சாகம், அதிகாரம், முயற்சி கைகூடும், போசன சுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பின்வரும் பகுதிகளில் உள்ளூராட்சி வாரமான இன்று முதல் 18ஆம் திகதிவரையான காலப்பகுதியில் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் பணி ஆரம்பிக்கப்பட உள்ளதாக பிரதேச சபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

மேலும் நாயினால் கடியுண்டு சிகிச்சைபெற வருபவர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பதால் இக்கட்டாக்காலி நாய்களை பிடித்தழிக்கும் பணி பரந்தளவில் செய்யப்பட உள்ளதாகவும் இதற்கு பொதுமக்கள் சனசமூக நிலையங்களின் பணி, ஒத்துழைப்பு மிகவும் அவசியம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, இவ்வார காலப்பகுதியில் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டி வளர்க்குமாறும் வீதிகளில், ஒழுங்கையில் உள்ள எந்த நாயும் கட்டாக்காலியாக கருதப்பட்டு நஞ்சூட்டி அழிக்கப்படும் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார்.

**திங்கட்கிழமை:-** காலை 9.00 மணி தொடக்கம் கோண்டாவில் பலாலி வீதிச்சந்தி அன்னங்கை வீதி, கோண்டாவில், மூத்தி மருந்தகவீதி நாராயணர் கோவில வீதி, புகையிரத நிலைய வீதி, சந்தை வீதி பாடசாலை வீதி.

**செவ்வாய்க்கிழமை:-** காலை 9 மணி தொடக்கம் திருநெல்வேலி சந்தைச் சுற்றாடல், அம்மன் வீதி, இராமலிங்கம் வீதி பாற்பண்ணைவீதி, பலாலி வீதி, தாளையடி ஒழுங்கை.

புதன்கிழமை கொக்குவில் கிழக்கு நந்தாவில், பொற்பதி வீதி சம்பியன் வீதி, மருத்துவ பீடச்சுற்றாடல், கொக்குவில் இந்து மயானவீதி

**வியாழக்கிழமை:-** திருநெல்வேலி கிழக்கு செங்குநதா வீதி, சட்டநாதர் விதி, கல்வியங்காட்டுச் சந்தி, பருத்தித்துறை வீதி.

**வெள்ளிக்கிழமை:-** கொக்குவில் மேற்கு குளப்பிட்டி வீதி, ஆடியபாதவீதி பீடாரி அமமன் கோவிலடி பொன்னையா வீதி நீதிராசா வீதி; மஞ்சவனப்பதி வீதி போன்ற இடங்களில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப் படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-252)

## நெருக்கடி நிலையில் பிரதமர் மஹிந்த!

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தின் அடிப்படையில் எதிர்வரும் 6வருடங்களுக்கு தற்போதைய நாட்டின் நிலையே தொடரும் அபாயம் உள்ளதாக பேராசிரியர் ஜி.எஸ். பீரிஸ் எச்சரித்துள்ளார்.

ஒரே ஒரு வித்தியாசமே தென்படும் அதாவது நாடு இன்னும் பின் தள்ளிப்போகும். அத்துடன் வெற்றிபெறும வேட்பாளர் தனது கட்சியின் ஒத்துழைப்புடனேயே நாட்டை முன்னேற்றிச் செல்ல முடியும். ஆனால் ஜே.வி.பியுடனான ஒப்பந தத்தை அடுத்து தனது கட்சிக்குள்ளேயே பாரிய நெருககடியை பிரதமர் எதிர்நோக்கு கின்றார். குறிப்பாக ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பையே அவர் நிராகரிப்பதாக தெரிவித்துளளார் என்றும பேராசிரியர் தெரிவித்துள்ளார்.(த-9)

## அநேக ஆங்கில ஆசிரியர்களுக்கு மாலைதீவில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

மாலைதீவில் பல்வேறு துறைகளில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு அந்நாட்டு தொழில் அமைச்சர் இணங்கியுள்ளார்.

அண்மையில் மாலைதீவிற்கு விஜயம் செய்திருந்தபோது அந்நாட்டின் தொழிலமைச்சர் இது சம்பந்தமாக தம்மிடம் உறுதி வழங்கியதாக தொழிலாமைச்சர் அதாவுட செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த் இணக்கப்பாட்டிற்கு அமைய ஆங்கில ஆசிரியர்களுக்கு பெருமளவில் தொழில் வழங்க மாலைதீவு தொழிலமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கட்டட நிர்மாணத் துறையிலும், ஹோட்டல்களிலும் இலங்கையருக்கு தொழில் வழங்க மாலைதீவு தொழிலமைச்சர் உடன் பட்டதாகவும் அமைச்சர் அதாவுட செனவிரட்ண தெரிவித்துள்ளார். (ற-7)


**தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு**



**இன்று ஒன்பதாம் திருவிழா**

**நின்பதமே பற்றுக் கோடம்மா**

அலைபாயும் கடல்போன் றலைபாயும் என்மனதில்
அமைதியினை அளிக்கின்ற தாயே
கலையாவும் நான் பயின்று கவிதைபல செய்திடவே
கனிவோடு வரமருளும் தேவி
நிலையாத வாழ்வினிலே நிலைக்கின்ற புகழ்பெறவே
நின்பதமே பற்றுக்கோ டம்மா
மலைபோன்ற சோதனைகள் பனிபோல ஓட்டுகின்ற
மகிடாசுர மர்த்தினியே அருள்வாயம்மா

மதுரகவி

# பண்டாரநாயக்க பரம்பரை இருக்கும் வரை சுதந்திரக் கட்சியை எவரும் ஏலம்போட முடியாது

(கொழும்பு)


பண்டாரநாயக்க பரம்பரையின் ரத்தத்தினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இதயத்தை உடைக்கவோ அல்லது அக்கட்சியினை பலருடன் சேர்ந்து ஏலம் போடவோ எவராலும் முடியாது என வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அனுரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை ஏலம் விடுவதற்கு சிலர் முயற்சிகளை செய்துகொண்டு வருகின்றனர். பண்டாரநாயக்க குடும்ப பரம்பரையின் இறுதியான நாள் இருக்கும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீது எவரும் கைவைக்க முடியாது.

சிலர் அதிகாரத்திற்கு வந்ததும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இதயத்தினை உடைப்பதற்கு முயற்சிகளைச் செய்கினறனர்.



பண்டாரநாயக்க குடும்பததை இலங்கை வாழ் மக்கள் எவரும் மறக்கமாட்டார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை யார் வேண்டுமானாலும் நிர்ணயிக்கலாம். பண்டாரநாயக்க குடும்பம் தான் நிர்ணயிக்க வேண்டும் என்று நான் குடும்பவாதம் பேசவில்லை. இக்கட்சியை யார் நிர்ணயிக்க வேண்டும் என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே முடிவெடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். (ற)

# பொலிஸ்மா அதிபர், முப்படை தளபதிகளுடன் இன்று தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்க இன்று பொலிஸ்மா அதிபர் மற்றும் முப்படைத்தளபதிகளுடன் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலினை நடாத்துவதற்கான விடயங்கள் குறித்து இச் சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளன. தேர்தல் சட்டங்களை உரிய முறையில் அமுல்படுத்துதல் மற்றும் தேர்தல் தினத்தன்று பொலிஸார் மேற்கொள்ள வேண்டிய விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன குறித்தும் இச் சந்திப்பின்போது கருத்துப் பரிமாறப்படவுள்ளது. (ற-4)

# தேர்தல் கடமைகளுக்கு அரச ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

இவ்வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பணியாற்றவுள்ள அரச ஊழியர்களின் விபரங்களை பெற்றுத்தருமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க சகல அமைச்சுக்களின் செயலாளர்களிடமும், திணைக்களத் தலைவர்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளார்

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு மற்றும் வாக்குகளை எண்ணும் பணிகளில் ஈடுபடவுள்ள அரச ஊழியர்களின் விபரங்களை பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் அமைச்சுகளுக்கும், திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-7)

# கொழும்பு பல்கலையில் விரிவுரைகள் மீள ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தற்போது மூடப்பட்டுள்ள முகாமைத்துவ மற்றும் நிதிப்பீடத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கான விரியுரைகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவம் மற்றும் நிதிப்பீட பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதன்படி முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இரண்டாம், மூன்றாம் மற்றும் இறுதி வருட மாணவர்களுக்கான விரிவுரைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

முகாமைத்துவம் மற்றும் நிதிப்பீட மாணவர்களுக்கும், கலைப்பீட மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து சுமார் ஒருமாத காலமாக முகாமைத்துவம் மற்றும் நிதிப்பீடம் மூடப்பட்டுள்ளதாக உபவேந்தர் தெரிவித்தார்.

இந்த மோதல்கள் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அதன்படி முகாமைத்துவும் மற்றும் நிதிப்பீடத்தைச் சேர்ந்த 4 மாணவர்க்ளுக்கு விரிவுரைகளில் பங்குபற்றுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நான்கு மாணவர்கள தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை கள் நடத்தப்பட்டு அவர்கள் குற்றவாளியாக நிருபிக்கப்பட்டால் தணடனை விதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சம்பந்தப்பட்ட இரண்டு பீடங்களுக்குமான புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் தாமதமாகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# தேர்தல் மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசு வேண்டுகோள்

## தேர்தல் ஆணையாளருக்கு கடிதம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது பாரிய அளவில் மோசடிகள் இடம்பெறுமென்பது தெளிவாக உள்ளதென்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளருக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடாத்துவதற்கு ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் கீழ் ஆணையாளருக்கு உள்ள அனைத்து அதிகாரங்களின் அடிப்படையில் மோசடிகள் இடம்பெறும் போது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் சுதந்திரமாக வெளிநாட்டு கண்காணிப்பாளர் ஒருவரை நியமிப்பது முக்கியமாகும். மற்றும் வாக்குநிலையப் பொறுப்பதிகாரிகளை நியமிக்கும் போது கட்சி பேதமின்றி அழுத்தங்கள் இன்றி செயற்படக் கூடியவர்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் தேர்தல் பாதுகாப்பு தொடர்பாக ஐக்கிய அரசாங்கம் தமது ஆலோசனைகளை கூறியுள்ளது.

வாக்குகள் எண்ணப்படும் போது மேற்கொள்ளப்படும் மோசடிகளை தவிர்ப்பதற்கு வாக்குகளை எண்ணும் நிலையங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை நியமிக்க வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# மக்களின் ஆதரவு இருந்தால் தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்

தமிழ் மக்களுக்கு தனித்தாயகம் இல்லை.

* சுயநிர்ணய உரிமை இல்லை.
*ஒற்றையாட்சியின் கீழேயே தீர்வு
*ஒஸ்லோ உடன்படிக்கையைக கைவிடத் தயார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மாகாண சபைகள் ஊடாகத் தீர்வுகானமுடியும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முக்கிய அரசியல் தரப்பொன்றுடன் அலரிமாளிகையில் நடந்த பேச்சுவார்த்தையில் உறுதியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அரசியல் தீர்வு என்பது மக்களை அரவணைத்து அவர்களின் விருப்பத்துக்கு அமைவானதாகக் காணப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள பிரதமர் மக்களைப் புறந்தள்ளி தலைவர்கள் தனித் தீர்வுகான முற்படக்கூடாது எனவும் அச் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (து-4)

# ஐ.தே.கவின் பொய்ப் பிரசாரங்களை நம்பவேண்டாம்–மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வர்த்தக சமூகத்தின் எதிரியாக தன்னை சிருஷ்டித்துக்காட்ட முனையும் ஐ.தே.கவின் பிரசாரத்தை நம்ப வேண்டாம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வர்த்தக சமூகத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

உள்நாட்டின் தொழில் முயற்சிகளுக்கு பாதுகாப்பை வழங்கப் போவதாக உறுதியளித்துள்ள அவர் ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் விவசாயம் அழிக்கப்பட்டது. 60 ஆயிரம் இளைஞர்கள் காணாமற்போயினர், வேலைவாய்ப்புகள் எவையும் உருவாக்கப்படவில்லை, அரசசேவை ஆட்குறைப்புக்களால் சுருக்கமடைந்தது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியிலிருந்து என்ன அபிவிருத்தியை சாதித்தார்? பத்து வருடங்களுக்கு தேர்தல் நடத்தாமல் ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆட்சிசெய்தார். ரணில் விக்கிரமசிங்க தான் 15 வருடங்களுக்கு தேர்தல் நடத்தாமல் ஆட்சிசெய்வாரென்ற சமிக்ஜைகளை காட்டுகின்றார்.

எம்மிடம் ஒரு தூரநோக்கு இருக்கிறது. ஒரு திட்டம் இருக்கிறது. தாம் இந்த நாட்டில் ஒரு நிரந்தர சமாதானத்தையும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவோம். என்னை நீங்கள் நம்பலாம் எனது வெற்றிக்காக மட்டுமல்ல நாட்டின் அபிவிருத்திக்கும், செல்வச்செழிப்புக்குமே நான் வேறு கட்சிகள் சிலவற்றுடன் கைகோத்து நிற்கின்றேன். எனவும் தெரிவித்துள்ளார். (த-6)

# சகல தேர்தல் நடவடிக்கைகளிலும் விசேட கவனம் செலுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாக்வும் நேர்மையாகவும் நடாத்தப்படும் என்பதை உறுதிப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கட்சி முன்னணியின் பொதுச் செயலர் சுசில் பிரேமஜெயந்த தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்காவிடம் கேட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது அரச கட்டுப்பாடற்ற வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பரந்தளவில் ஒருங்கீனங்கள் இடம்பெற்றதாக ஐரோப்பிய ஒன்றியமும், உளளூர் கண்காணிப்பாளர்களும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலைமையினைக் கருத்தில்கொண்டு வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாக்குச் சாவடிகளை அமைப்பது உட்பட சகல தேர்தல் நடவடிக்கைகளிலும் விசேட கவனம் செலுத்துமாறு அவர் தேல்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளார். (த-4)

# க.பொ.த (உ/த) பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கிடைக்கப்பபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகள் வருமாறு:-

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

செ.சிவசொரூபன் - 3ஏ
செ.திருக்குமரன் - 3ஏ
கி.சிறீதரன் - 3ஏ
த.மோகனடயானி - 3ஏ
ம.மயூரி - 3ஏ
இ.தசரதன் - 2ஏ, பி
க.துஷாந்தினி - 2ஏ, பி.
பா.எட்வேட் சுஜீபன் - 2ஏ பி
நி.சுஜீந்தன் - 2ஏ பி
ச.நிஷாந்தி - 2ஏ பி
பா.பிரசாத் - 2ஏ பி
தே.டயானி - 2ஏ எஸ்
இ.தர்சன் - ஏ, 2பி
நி.துஷ்யந்தன் - ஏ, 2பி
சி.நந்தினி - ஏ, 2பி
ந.சாய்கீதா - ஏ, 2பி
கு.சஜீதா - ஏ, 2பி
மு.நிலானி - 3பி
யோ.கோபிநாத் - ஏ, பி,சி
ப.பாமினி - ஏ,பி,சி
கு.பிரியதர்சினி - ஏ.பி.சி
க.பிரியந்தி - ஏ.பி.சி
க.தபோதினி - ஏ,பி.சி

**வர்த்தகத்துறை**

மு.சொரூபினி 3ஏ
மு.மயூரா 2ஏ, பி

**பொறியியல்துறை**

இ.ஜனாசிராம் - 2ஏ, பி
பா.டினேஸ் - 2ஏ, சி
பா.டிலீபன் - ஏ, 2பி

**பௌதீக விஞ்ஞானம்**

த.சிந்தியா - பி, 2சி
ச.கார்த்தீபன் - பி.சி.எஸ்
த.தறோபன் - பி,சி,எஸ்
அ.ஐசாக் விஜயகாந் - 3சி

(ற)

# மரக்கன்றுகள் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு சூழலியல் மேம்பாட்டு அம்மவனம் அப்பகுதி பாடசாலை மாணவர்களைக் கொண்டு புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் மரக்கன்றுகளை நாட்டவுள்ளது.

இந் நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்று புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் 150 மலை வேம்பு மற்றும் இலுப்பை கன்றுகள் நாட்டப்படவுள்ளன.

அத்துடன் இன்றையதினம் சூழலியல்துறை சார்ந்த நிபுணர்களின் விளக்க உரைகளும் இடம்பெறவுள்ளது. (ற-19)

## இன்று ஒரு தகவல்

# அன்பும் ஆணவமும்

ஒரு ஊரில் ஒரு பெரிய மாமரம் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. அதில் நிறையப் பூக்கள், கனிகள், பறவைகள் இருந்தன. ஒரு சிறு பையன் அந்த மரத்தடியில் வந்து விளையாடுவது வழக்கம். மரத்திற்கு அந்தப் பையன் மீது ஒரு பாசம் உண்டாக ஆரம்பித்தது.

இந்தப் பையன் அந்த மரத்திலுள்ள பூக்களைப் பறிக்க வேண்டும், பழங்களைப் பறிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்காகவே அந்த மரம் தனது கிளைகளை வளைத்து அவனுக்கு எட்டுகின்ற அளவுக்குத் தலை சாய்த்தது. பையன் பூக்களைப் பறித்தான். மரம் சந்தோஷப்பட்டது.

மரம் அன்பின் அடையாளம். அதனால் அது கொடுப்பதில் சந்தோஷப்பட்டது. மனிதன் ஆணவத்தின் அடையாளம். அதனால் இவன் பறிப்பதில் சந்தோஷப்பட்டான். பையன் வளர்ந்தான். அந்த மரத்தின் அடியில் படுத்துத் தூங்கினான். பூக்களைப் பறித்து மலர்க் கிரீடம் செய்து தலையில் சூடிக்கொண்டான். அதைப் பார்த்து அந்த மரம் சந்தோஷப்பட்டது.

சில நாட்கள் கழிந்தன. இவன் இன்னும் கொஞ்சம் பெரியவனானான். அந்த மரத்தில் ஏறி கிளையில் அமர்ந்து ஊஞ்சலாட ஆரம்பித்தான். அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதில் மரத்திற்கு ஆனந்தம். இது அன்புக்கும் ஆணவத்திற்கும் உள்ள வித்தியாசம்.

பையன் இன்னும் கொஞ்சம் வளர்ந்தான். அவனுக்குக் கடமை இலட்சியம் எல்லாம் வந்து சேர்ந்தது. படித்துப் பரீட்சையில் சித்தி பெறவேண்டியிருந்தது. அதனால் மரத்திடம் வருவதில்லை அவன். ஆனால் மரம் இவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. இவன் உலக விடயங்களில் மூழ்கிவிட்டான்.

தற்செயலாக ஒருநாள் அந்தப் பக்கமாகப் போனான். மரம் அவனைப் பார்த்தது. " மறந்துவிட்டாயா என்னை? நான் உன்னைப் பார்க்கவேண்டும் என்று ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றது. இவன் அதற்கு "நீ என்ன வைத்திருக்கிறாய்? நான் ஏன் உன்னிடம் வர வேண்டும்? உன்னிடம் பணம் இருக்கிறதா சொல் வருகிறேன். ஏனென்றால் நான் இப்போது பணத்தைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றான். "உனக்குப் பணம் தானே வேண்டும் எனது பழங்களைப் பறித்துக் கொள் அதை விற்பனை செய் பணம் கிடைக்கும்" என்றது மரம்.

உடனே இவன் மரத்தில் ஏறினான். பழங்களைப் பறித்தான். பழுக்காத காய்களையும் பறித்துவிட்டான் தனது கிளை கொம்புகள் உடைந்தாலும் கூட அந்த மரம் கவலைப்படவில்லை சந்தோஷப்பட்டது. இவன் பழங்களைப் பொறுக்கிக்கொண்டு அந்த மரத்துக்கு ஒரு நன்றி கூடச் சொல்லாமல் அவன் திரும்பிப் போய்விட்டான்.

அதன் பின் அவன் அந்தப் பக்கமே திரும்பவில்லை. பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்தான். மரத்திற்கு அவன் வரவில்லையே என்று மீண்டும் வருத்தம். பல வருடங்கள் கழித்து அவன் மீண்டும் வந்தான். 'வா மகனே... என்னை வந்து கட்டிப்பிடித்துக்கொள்" என்றது அந்த மரம். இவன் "நான் என்ன இன்னும் சின்னப் பிள்ளையா உன்னை வந்து கட்டிப்பிடித்துக் கொள்ள" என்றான். நான் இப்போது ஒரு வீடு கட்டப்போகிறேன்.

அதற்கு உன்னால் உதவ முடியுமா? என்றும் கேட்டான். "எனது கிளைகளை வெட்டிக்கொள்" என்றது மரம். சிறிது நேரத்தில் மரத்தை மொட்டையடித்துவிட்டான்.

மீண்டும் 'சில நாட்கள் கழித்து அந்த மனிதன் வயதாகிக் கிழவனாகி வந்தான். "நான் தூர தேசங்களுக்குப் போய் பணம் உழைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் நான் பிரயாணம் செய்ய ஒரு படகு தேவை அதற்கு உதவ முடியுமா?" என்றான். அதற்கு அந்த மரம் "அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை என் அடி மரத்தை வெட்டிக் கொள்" என்றது மரம்.

அவன் வெட்டினான், படகு செய்தான், போய்விட்டான். இனித் திரும்பி வருவானோ மாட்டானோ தெரியாது ஆனால் இந்த அடிமரம் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். ஏனென்றால் இது அன்பின் அடையாளம். அவன் ஆணவத்தின் அடையாளம். அன்பு கொடுக்கத்தான் ஆசைப்படும். ஆணவம் வாங்குவதற்குத் தான் ஆசைப்படும். இப்படி ஒரு கதையைச் சொல்லியிருக்கிறார் ஒரு பேரறிஞர்.

நமது ஆள் ஒருவன் "கடல் கடந்து போயுள்ள என் நண்பன் வரப்போகிறான் அவனுக்காக இந்தக் கடற்கரையில் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றான். "அவ்வளவு பிரியமா அவன் மீது?" என்றேன். அப்படி இல்லை அவன் போகும்போது நான் இங்கே கட்டி வைத்திருந்த எனது படகைக் கடத்திக் கொண்டு போய்விட்டான். திரும்பி வந்ததும் அவனைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும் அதுதான் காத்துக் கொண்டிருக்கிறேன் என்றான் அவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஜே.வி.பி,ஹெல உறுமயவிற்கு அடிபணிந்த மஹிந்த மீது முஸ்லிம்கள் கடும் அதிருப்தி

(கொழும்பு)

பேரினவாதிகளான ஜே.வி.பி,ஹெல உறுமய விதித்த நிபந்தனைகளை சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டிருப்பது குறித்து முஸ்லிம் மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டால் முஸ்லிம்களின் பிரச்சினைகளை அவர் அங்கீகரிக்கமாட்டார் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடித்திருப்பதால் தான் வடககில் இடம்பெயர்வுககுள்ளான முஸ்லிம்கள் மீளக் குடியேறி இயல்பு வாழ்க்கை வாழ முடிந்திருககிறது என்று வடக்கு முஸ்லிம் உரிமைகள் அமைப்பின் செயலாளர் மௌலவ சுபியான் தெரிவித்தார்.

1990களில் முஸ்லிம்கள் 15ஆயிரம் பேர் இடம் பெயர்வுக்குளாகினர். ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் 25ஆயிரம் பேர் தங்கள் முன்னைய குடியிருப்புக்களுக்குள் திரும்பியுள்ளனர்.

அரசாங்கம் உரிய நிதியுதவிகளையும் இயல்பு வாழக்கை வாழ்வதற்கான சூழலையும் உருவாக்கியிருந்தால் எஞ்சியுள்ள முஸ்லிம்கள் அனைவரும் தங்களது வாழ்விடங்களுக்கு திரும்ப முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் இடம்பெயர்வுக்குள்ளாக்கப்பட்டாலும் அதே ஐக்கய தேசியக் கட்சி உருவாக்கிய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால்தான் மீளக்குடியேறியிருக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# இளைஞர், யுவதிகளின் அர்ப்பணிப்பிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது-ஜனாதிபதி

(கொழும்பு)

படித்த இளைஞர்,யுவதிகள் காட்டும் அர்ப்பணிப்பிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான அரச சேவை செயல்திறனை அதிகரிக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டென தெரிவித்தார்.

பட்டதாரிகள் 600 பேருக்கு ஆசிரியர் சேவையில் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்காக ஜனாதிபதி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற வைபத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி பெற்ற இளைஞர்,யுவதிகள் சிறந்த தொழில் வாய்ப்பைப் பெறும் உரிமைகளைக் கொண்டிருக்கின்றார்கள். அவற்றை மதிக்கும் வகையிலேயே 45 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான முயற்சிகளை ஆரம்பித்ததாக அவர் தெரிவித்தார்.

நியமனம் பெறும் பட்டதாரிகளின் 5 சதவீதமானோர் கல்வியமைச்சின் கீழ் இணைக்கப்படுகின்றார்கள். ஒரு சிலர் பொது நிர்வாக சேவையின் மூன்றாம் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாக இணைததுக் கொள்ளப்படவுள்ளனர்.

15 ஆண்டுகளுக்குப் பின்னர் கல்வி நிர்வாக பரீட்சையை நடத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரச சேவையில் உயரிய சேவையான ஆசிரியர் சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் சுபீட்சத்திற்கு வழிவகுக்குமாறு நியமனம் பெற்ற பட்டதாரிகளை ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். (த-9)

# உயர்பாதுகாப்பு வலயத்தில் ஜனாதிபதிக்கு 10 ஏக்கர் காணியா?

## தினேஷ் குணவர்த்தன மறுப்பு

(கொழும்பு)

அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்கவுக்கு பத்து ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என ஊடகங்களில் வெளியான செய்திகளை நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நிராகரித்துள்ளார்.

அமைச்சர் அலுவலகம் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் உயர் பாதுகாப்பு வலயத்தில் பத்து ஏக்கர் காணி ஜனாதிபதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரச செலவில் வீட்டிற்கான அடிக்கல்லை நாட்டுவதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் என்று வெளியான ஊடகச செய்திகள் முற்றிலும் தவறானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி உத்தேச வீடமைப்புக்கான இனங்காணப்பட்டுள்ள காணி நாட்டின் தலைவருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கென தீர்மானிக்கப்பட்ட காணி அல்ல எனவும் அமைச்சர் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தக் காணியில் எந்தவித கட்டட நிர்மாண வேலைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (த-9)

# பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணம், உயர்தரப் பரீட்சைகளில் தோற்றி சித்தியடையாது பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின வாழ்க்கைக்குத் தேவையான தொழில்நுட்பம் தொடர்பான தகவல்களைப் பெறவும் ஆளுமை விருத்தியை ஏற்படுத்தும் வகையிலும் தேவையான தொழிற்சார் பயிற்சியையும் அது தொடர்பான தொழில்சார் வல்லுநர்களின் உதவியுடன் வழிகாட்டலையும் வழங்குவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்து வழங்க மாகாண கல்வித் திணைக்களத்தின அனுசரணையுடன் தீவக வலய கல்வித் திணைக்களம் முன்வந்துள்ளது.

எனவே இவர்களை இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன் சுயவிபரத்தை பதிந்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ இலவசப் பயிற்சி பற்றிய நிலையமும் இடமும உரியகாலத்தில் அதிபர்கள் ஊடாகவும் பத்திரிகை வாயிலாகவும் அறியத் தரப்படும் என தீவக வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற)

# ஜே.வி.பி மஹிந்த ஒப்பந்தத்திற்கு பல்லின சமூக அமைப்பு வரவேற்பு

(கொழும்பு)

ஜே.பி.யினருக்கும் பிரதமர் மஹிந்தவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை நாட்டின் பல்லின சமூக அமைப்புக்களும் வரவேற்றுள்ளன.

சங்கைக்குரிய சமணதேரர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்,நாட்டில் ஒற்றுமை, பாதுகாப்பு ஏற்படுவதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திர சதுக்க நில அங்கத்தவர் பந்துல எல்லாவல இந்த நடவடிக்கை மூலம் எதிர்க்கட்சியினர் நிச்சயம் தோற்கடிக்கப்படுவார்கள் என்பதே பொது மக்களின் கருத்தாகும் என்று தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி ஜம்பானி பத்மசேகர கருத்துத் தெரிவிக்கையில்,ஒப்பந்தத்தின் அடிப்படையில் முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்துள்ளதன் காரணமாக [illegible]லது சாரிகளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலின் போது பிரதமர் மஹிந்தவுக்கு ஆதரவு வழங்குவது என 14 அரசியல் கட்சிகள் உறுதி தெரிவித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொண்டுள்ள அரசியல் கட்சியினர் ஜே.வி.பியினரின் தொழிற்சங்கங்கள் மற்றும் அரசாங்க தனியார் நிறுவனங்கள் என்பன பிரதமருக்கு ஏற்கனவே தமது ஆதரவை வழங்கியுள்ளன.

கிழக்கு மக்களின் ஜனநாயக முன்னணி இலங்கை தென்கிழக்கு கல்விப் பேரவை கல்முனை மாவட்ட பதில் அதிபர் சங்கம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (த-9)

# நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவே மஹிந்தவுக்கு ஹெல உறுமய ஆதரவாம்

(கொழும்பு)

நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக மட்டுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நாட்டின் ஒருமைப்பாட்டினை பாதுகாக்க அதிகாரத்தை பரவலாக்கும் செயற் திட்டத்தை முழுமையாகக் கைவிடுவதற்கு வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவிக்க வேணடும் என்று கொழும்பில் கடந்த புதனன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

தமது ஆதரவு மஹிந்த ராஜபக்ஷவிற்கே தவிர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ அல்லது வேறு அரசியல் கட்சிகளுக்கோ இல்லை. தேசியக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எவ்வித பாதிப்பு ஏற்படாது.

தேர்தலை நியாயமானதாகவும்,சுதந்திரமானதாகவும நடத்துவது குறித்து முழுமையான கவனம் செலுத்துவது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)



# பௌதீகம்,இரசாயனம்,உயிரியல் பாடங்கள் இனி க.பொ.த (சா/த) உடன் சேர்க்கப்படும்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் பௌதீகம், இரசாயனம்,உயிரியல் போன்ற பாடங்களும் எதிர்காலத்தில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய கல்வியை உலக கல்வி அமைப்பு முறைக்கு ஏற்றதாக மேம்படுத்தும் முயற்சியின் ஒரு கட்டமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் கணிதம், தகவல் தொழில் நுட்பம்,விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதற்கும் புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இலங்கையில் தற்போது 9900 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் 4200 பாடசாலைகளிலேயே நூலக வசதிகள் காணப்படுகின்றன. எனவே, பாடசாலை அமைப்பு முறைகளை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞ-8)



கடந்த வெள்ளிக்கிழமை பளையில் இடம்பெற்ற தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு நிகழ்வில் கடன் மீளளிக்கப்படுவதையும், இதற்காக சென்றிருந்த பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

# கிழக்கில் கெரில்லாத் தாக்குதல்; இராணுவ அதிகாரி தெரிவிப்பு!

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி விடுதலைப் புலிகள் கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளை கிழக்கில் மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என கிழக்கு மாகாண சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் கொழும்பு ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

எதிரியின் மீது வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தும் முக்கிய யுத்த நடவடிக்கையான இதனை செயற்படுத்துவதானது மிக மோசமான யுத்த நிறுத்த மீறலாகும்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் இவ்வாறானதே. பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளுக்காக நடந்து சென்று கொண்டிருநத அவர்கள் திடீரென வாகனத்தில் செல்ல தீர்மானித்தனர். அதனால் ஏற்பட்ட சேதம் குறைவாக இருந்தது. அவர்கள் நடந்து சென்றிருந்தால் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

கிழக்கில் பாதுகாப்புப் படையினர் மீது முன்னர் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், தற்போது அவர்கள் மறைந்திருந்து தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளனர். இந்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதென்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(த-4)

# சந்திரிகாவின் கடிதம் எதுவும் மஹிந்தவுக்கு கிடைக்கவில்லையாம்

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டமை தொடர்பாக கட்சியின் கொள்கைகளை மீறிச் செயற்பட்டதாகவும் அது தொடர்பாக விளக்கம் தருமாறும் சுதந்திரக் கட்சியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுளளதாக செய்திகள் வெளிவந்திருக்கும் நிலையில் தமக்கு அத்தகைய கடிதம் எதுவும் கிடைக்கவில்லை என மஹிந்த ராஜபக்ஷ மறுப்பு தெரிவித்துள்ளார்.

பி.பி.சியின் சிங்கள சேவைக்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய நேர்காணலில் இக்கடிதம் பற்றி கேட்கப்பட்டபோது அப்படி ஒரு கடிதம் தனக்குக் கிடைக்கவில்லை எனவும் கடிதம் கிடைக்காத நிலையில் அதுபற்றி தன்னால் எதுவும் கூற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பணிக்கான காத்திருப்பில் வஜிர குணவர்த்தன

(கொழும்பு)


கொழும்பு கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தனவுக்கு புதிய பணி இடத்துக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமல் அரசு இழுத்தடிப்பு செய்து வருகிறது.

லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்குப் பிறகு கொழும்பின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் செயற்திட்டம் குறித்து வஜிர குணவர்த்தனவுடன் முப்படைத் தளபதி தயா சந்தகிரி ஆலோசனை நடத்தினார்.

கொழும்பை மட்டும் பலப்படுத்தாமல் தேசிய பாதுகாப்புச் செயற்திட்டத்தை உருவாக்குவதே சரியாக இருக்கும் என்ற கருத்தையும் செயற்றிட்டத்தையும் வஜிர குணவர்த்தன முன்வைத்திருந்தார்.

இதை ஏற்காத தயா சந்தகிரி தொலைபேசி தகவல் மூலம் மேஜர் ஜெனரல் பி.சந்திரவன்சவிடம் பொறுப்புகளை மாற்றினார்.

இதையடுத்து பனாகொடவில் உள்ள 11ஆம் பிரிவின் தலைமையக அதிகாரியாக வஜிர குணவர்த்தன நியமிக்கப்படக் கூடும் எனறும் கூறப்பட்டாலும் அதற்கான ஒழுங்களை அரசு செய்யவில்லை என்றும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. (ற)



# அபிவிருத்திப் பணிகளில் பிரதமர் மஹிந்த நாட்டம்

(கொழும்பு)

சமுர்த்தி நலன்களைப் பெறுவோருக்கான பணிகள் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதமர் உறுதியளித்துள்ளார்.

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப செலவுப் படிகளை அதிகரிக்க அரசாங்கம் விரும்புகின்றது என ஹெம்பிலிப்பிட்டியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

சமுர்த்தி நலன்களினைப் பெறுவோர் நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களில் கூடுதலாக ஈடுபடுத்தப்படுவர். நாட்டிற்கு தற்போது அதிகமாகத் தேவைப்படும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலைகள்,உத்தரவாதம் செய்து கொடுக்கப்படும்.

இதுவரை நகர்ப்புறங்களில் செயற்பட்டு வந்த கைத்தொழிற்சங்கள் இனிமேல் நாட்டில் பின்தங்கிய பகுதிகளுக்கும் விஸ்தரிககப்படும் என பிரதமர் உறுதியளித்தார்.

இதேவேளை, தெற்கில் புதிய விமான நிலையத்தினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (த-4)



நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகம் நேற்று இளைஞர் குழுவால் அடித்து நொருக்கப்பட்டது. கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு காணாமல் போன மாடு ஒன்றினை இறைச்சி போடுவதற்கு இப் பிரதேசசபை அனுமதி வழங்கியதற்காகவே அடித்து நொருக்கப்பட்டது. (19)

# அரச ஊடக பொறுப்பாளர்களுடன் ஜனாதிபதி அவசர சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வெள்ளிக்கிழமை அனைத்து அரச ஊடக பொறுப்பாளர்களுக்கும் அவசர சந்திப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது அரச ஊடகங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறிதது ஆலோசனைகளை வழங்குவதற்காகவே ஊடக அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இச்சந்திப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தொிவித்தன.

இச சந்திப்பில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.எம். சுபைர்,சுயாதீன தொலைக்காட்சி சேவையின் பணிப்பாளர் நியுட்டன் குணரத்ன மற்றும் ஏரிக்கரை பத்திரிகை நிறுவனப் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் ஆகியோர் உட்பட அந்த நிறுவனங்களின் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (த-4)

# குரு மாற்றம்



## துலாம்

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அன்பார்ந்த துலாம் இராசி வாசகர்களே! சிரித்த முகத்தோடு மற்றவர்களைக கவரும் திறம் படைத்த உங்களுக்கு 3,6க்கு அதிபதியான குரு பகவான் வரும் 19-9-2005 முதல் ஜென்ம இராசியில் சஞ்சாரம் செய்ய உள்ளார். இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைவரான குரு பகவான் ஜென்ம இராசியில் சஞ்சரிக்க உள்ளதால் எதிர்மறையான பலன்களை எதிர்கொள்வீர்கள். வேலைப்பளு அதிகரித்து வீண் குழப்பங்களும் நிம்மதியற்ற நிலையும் உண்டாகும். குரு விரைய ஸ்தானத்திலிருந்து ஜென்ம இராசிக்கு வந்துள்ளதன் மூலம வீண் விரயங்கள் குறையும் என்றாலும் தனிப்பட்ட முறையில் பிரச்சினைகள் அதிகமாகும். உங்கள் செயல்பாடுகளில் தேக்கமான நிலை உண்டாகும். ஜென்ம இராசியில் குரு சஞ்சரிப்பது மட்டுமன்றி ஜீவன ஸ்தானமான 10ஆம் வீட்டில் சனி பகவான் 27-6-2005 முதல் 4-8-2007 முடிய சஞ்சாரம் செய்வதால் நீங்கள் எதிலும் அதிகக் கவனத்துடன் செயல்படுவது மிகவும் உததமம். புதிய வாய்ப்புகள் தேடி வந்தாலும அது உங்களது தகுதிக்குக குறைந்த வாய்ப்பாகவேதான் இருக்கும். உங்களுக்கு வரவேண்டிய பணவரவுகள் தடைப்பட்டு பொருளாதார நெருக்கடி உண்டாகும். மற்றவர்களுக்கு வாக்குறுதி அளிப்பது, ஜாமீன் அளிப்பது நல்லதல்ல. மனதை ஒருநிலைப்படுத்தி செயல்பட்டால் வெற்றி மேல் வெற்றியடையலாம்.

### ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியம் ரீதியாக நீங்கள் பாதிக்கப்படுவீர்கள். பித்த சம்பந்தமானவற்றால் ஓரளவு உபாதை ஏற்படும். சிலருக்கு உடலில் சிறு அறுவைச் சிகிச்சையும் செய்ய நேரலாம். நீங்கள் கவனமாகச செயல்பட வேண்டிய ஆண்டாக இருக்கும். மனைவி, பிள்ளைகளின் வழியிலும் கூட தேவையற்ற அலைச்சல், டென்ஷன, அமைதியற்ற மனக்குழப்பமான சூழ்நிலைகள் அமையும். மனக்கவலையாலும் சோர்வடைவீகள். தாய், தந்தை வழியில் மருத்துவச் செலவு இருக்கும். குடும்ப வாழ்வில் அமைதிக் குறைவும் திருப்தியற்ற நிலையும் காணப்படும்.

### செல்வம், செல்வாக்கு

பணவரவு சரளமாக இருக்காது. வரவேண்டிய பணம் தடைப்படும். பற்றாககுறையால் வீட்டிலுள்ள பொருள்களை அடமானம வைக்கவும் நேரலாம். சிலர் பழைய வண்டி, வாகனத்தை விற்க நேரும். கடன் தொல்லைகள் அதிகமாகி மன அமைதி கெடும். அசையாச் சொத்துக்களின் மேல் எதிர்பாராத செலவுகளும் வழக்குகளும் ஏற்படக்கூடும். சிலர் இருக்கும் பணத்தையும தவறான வழிகளில் செலவழித்துவிட்டுப பின்பு வருத்தப்படும் சூழ்நிலையும் அடைவீர்கள். கையில் காசு தங்காது. தேவையற்ற வீண் செலவுகள் ஏற்படும். உறவினர்களாலும் நண்பர்களாலும் உதவிகளைப் பெறமுடியாது. நிதானம் தேவை.

### குடும்பச் சூழ்நிலை

குடும்ப வாழ்வில் மனமகிழ்ச்சி இருககாது. உற்றார், உறவினர்கள் வருகையால் செலவுகள் கூடுமே தவிர உதவி இராது. புத்திரர்களும் உங்கள் சொற்படி நடக்க மாடடார்கள். கணவன் - மனைவியிடையே கருத்து வேறுபாடு இருக்கும். திருமண சுப விரயம் ஏற்படும். நல்லவரன் அமைய இடையூறுகள் ஏற்படும். சகோதரர்களுக்குள் பொறாமைகள் உண்டாகும். பொருள் நஷ்டம் ஏற்படும். ஆடை, ஆபரணம், வீடு, வண்டி, வாகனம் வாங்க தடையாகும். எல்லா வகையிலும் ஏற்றம் ஏற்படாது.

### உத்தியோகஸ்தர்களுக்கு

அடிக்கடி விடுப்பு எடுத்து வேலைப்பளுவை அதிகமாக்கிக் கொண்டு உள்ள பணியைச் செய்யவே முடியாது. கடுமையாக உழைக்க நேரிடும். சிலருக்குப் புதிய இடமாற்றம் ஏற்பட்டு அலைச்சல், டெனஷன் உண்டாகும். பதவி, ஊதிய உயர்வுகள் தடைப்படும். புதிய வேலை அமையாது. நண்பர்களின் உதவி கிட்டாது. புதிய அதிகாரிகளின் கெடுபிடிகள் மனதில் வேதனையை ஏற்படுத்துவதோடு கடின உழைப்பினையும் மேற்கொள்ள நேரிடும். போட்டி, பொறாமைகளும் அதிகமாகும். குடும்பத்தை விட்டுச் சிலர் பிரிந்து வாழ நேரிடும்.

### தொழிலதிபர்களுக்கு

புதிய திட்டங்களைச் செயல்படுதத இது ஏற்ற காலமாக அமையவில்லை. கூட்டாளிகளுடன் அடிக்கடி பிரச்சினைகளும் காரசாரமான வாக்குவாதங்களும் நடைபெறும். அது விரோதமாகி பிரிவை ஏற்படுத்தும். எனவே மிகவும எச்சரிக்கை தேவை. வியாபார ரீதியாக போட்டி, பொறாமைகளை எதிர்கொணடு மந்தமாகவே நடத்துவீர்கள். வியாபார நிலையிலும் பலனை அடையமாட்டீர்கள். ஓரளவிற்கு இலப பலனடையத் தாமதமாகும்.

### மங்கையருக்கு

குடும்ப வாழ்வில் அமைதியோ, நிம்மதியோ இருக்காது. எதிர்பாராமல் சிலருக்கு இருக்கும் வீட்டை விற்க நேரிடும். உடல் நலம் சிறப்பாக இருக்காது. கர்ப்பக் கோளாறு, வயிற்று உபாதைகள் உண்டாகி வெறுப்பு மிஞ்சும். பொருளாதார நிலையைப் பார்த்து பெருமூச்சும் ஏக்கமும் உண்டாகும்.

### கல்விநிலை

கல்வியில் முன்னேற்றமடைய இடையூறுகள் தோன்றும். உங்கள் மனம் முழுவதும் வீட்டுக் கவலையிலேயே ஆழந்திருப்பதால் கல்வியில் கவனம் செலுத்த முடியாது. சக மாணவர்களால் தேவையில்லாத பழக்கத்திறகு ஆளாகக்கூடும். மனதைத் தியானத்தில் செலுத்துவது நல்லது.

### கலைஞர்களுக்கு

எதிர்பார்த்த புதிய வாய்ப்பினைப் பெற முடியாது. தேவையில்லாத வெளியூராப் பயணம் ஏற்பட்டு அலைய நேரிடும். தொழிலில் போட்டிகளும் பொறாமைகளும் உருவாகும். பண வரவுகளும் சரியாக அமையாது. மற்றவர்களால் தேவையற்ற கிசுகிசுககளில் மாட்டி பதில் சொல்ல முடியாது. உங்கள் அலட்சியத்தால் நல்ல வாய்ப்புகளை இழந்துவிடுவீகள். எதிலும கவனமாகச் செயல்பட வேண்டும்.

### விவசாயிகளுக்கு

சிலருக்கு வேலையை விட்டுவிட வேண்டியிருக்கும். அதிகமான உழைப்பின்னை மேற்கொள்ள நேரிடும். தொழிலாளி - முதலாளி உறவில் பாதிப்புகள் உண்டாகும். உழைப்பிற்கேற்றபடி ஊதியம் பெறமுடியாது. கரும்பு, நெல், சோளம் ஆகியன புழு, பூச்சிகளால் பாதிப்படையும். நிலம், வரப்பு வழக்குகளிலும் ஈடுபட நேரிடும்.

### இளைஞர்களுக்கு

நீங்கள் உங்கள் நண்பர்களால் பல விதமான இடையூறுகளைச் சந்தித்திட நேரிடும். பணிபுரியும் இடத்தில் திருப்தியற்ற நிலை உண்டாகும். கற்ற கல்விக்கேற்ற வேலை அமையாது. குடும்பத்திலும நிம்மதியற்ற சூழ்நிலைதான் அமையும். தேவைக்கு அதிகமாக உழைக்கவேண்டி நேரிடும்.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

இக்காலத்துல் கடந்தகாலச் சோதனைகள் சற்றே குறையும். மனதில் உற்சாகமும் சந்தோஷமும் உண்டாகும். உடல்நலம் படிப்படியாக சீரடையும். குடும்ப வாழ்வில ஏற்பட்ட குழப்பங்கள் மெல்ல விலகி ஒற்றுமையுடன் செயல்பட வழிவகை ஏற்படும். கணவன் - மனைவியிடையே இருந்த மனக்கசப்பு மாறும். புத்திரர்களின் மருத்துவச் செலவுகள் வெகுவாகக குறையும். பொருளாதார நிலையிலிருந்த நெருக்கடிகளும கடனும் குறையும் வாய்ப்புகள் ஏற்படும். அலைச்சல் பெருமளவில் குறையும். ஓரளவு அனுகூலப் பலனை அடைவீகள். திருமண முயற்சிகளை மேற்கொள்ள நல்ல சூழ்நிலை காணப்படும். கூட்டுத் தொழிலிலும் கொடுக்கல், வாங்கலிலும் சற்று நிதானமாகச் செயல்பட்டால் மட்டும் சற்று சாதகப் பலனை அடைய முடியும. புதிய முயற்சிகளில் கடினமாக உழைககவேண்டி நேரிடும். உத்தியோக நிலையில் உயர் அதிகாரிகளின் ஆதரவைப் பெறமுடியும். உங்களை நீங்களே போட்டுக் குழப்பிக்கொள்வீகள். எதையும் ஆற அமர யோசித்துச் செயல்படுவது உத்தமம்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

இக்காலத்தில் உங்களின் உடல்நலம் உஷண சம்பந்தமான பாதிப்புகளை அடையும். அதிக நேரம் உழைக்க வேண்டிய சூழ்நிலை, அலைச்சல் போன்றவற்றை ஏற்படுத்தும். சகோதரர்களுடன் தேவையற்ற மனஸ்தாபம் உண்டாகும. குடும்பத்தின அமைதி குறையக்கூடிய சூழ்நிலைகள் உண்டாகும். கணவன் - மனைவியிடையேயான உறவு சண்டை, சச்சரவுகளால் பாதிக்கும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போக வேண்டியது உத்தமம். திருமண சுபகாரிய முயற்சிகளில் தடைகளை ஏற்படுத்தும். பற்றாக்குறைகளால் கடன்கள் வாங்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகும. கமிஷன், ஏஜென்ஸி, கொண்டராக்ட போன்றவை அவ்வளவாக ஏற்றம் தராது. உத்தியோக நிலையில் மந்தமாகச் செயல்பட வேண்டிய சூழ்நிலையும் அலைச்சல், டென்ஷன், வேலைப்பளுவும் கூடும். அரசியலில் சற்றே அனுசரித்துப் போக வேண்டும. மாணவர்களின் கல்வியில் முயற்சிகள் தேவை. விவசாயிகளுக்கு பயிர்களில் புழு, பூச்சிகள் தொல்லை தரும். கலைஞர்களின் புதிய வாய்ப்புகள் தாமதப்படும.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

இக்காலம் மிகவும் சோதனைகள மிகுந்ததாகவே காணப்படும். உஷ்ண சம்பந்தமானவற்றால் உடல்நலம் பாதிப்படையும். மனைவி, குழந்தைகளின் வழியில் மன சஞ்சலம் ஏற்படும். மனதில் அமைதி குறையக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும். மிகவும் நெருக்கடியான நிலையில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைகளால் சிலரிடம் விரோ

# உங்களுக்கு எப்படி?

**19-09-2005 முதல் 20-10-2006 வரை**

தம் வளரும். திருமண சுப நிகழ்ச்சி முயற்சிகளைத் தவிர்ப்பது நிச்சயமாக நன்மை தரும். வண்டி, வாகனம் பழுதடையும். எடுககும் காரியத்தை முழுமையாக முடிக்க முடியாது. அரசு மூலம் எதிர்பாராத சோதனைகளும் போட்டி, பொறாமைகளால் இலாபக் குறைவும் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தும் கொடுக்கல், வாங்கலில் மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். தேவையற்ற சிக்கலில் சிக்கிக்கொள்ள நேரிடும. மாணவர்களின் கல்வி நிலையில் மந்தமான நிலைகள் அமையும். மதிப்பெண்கள் குறையும. அசதியும் சோர்வும் உண்டாகும். விவசாயிகளுக்கு போதிய பண வருமானம அமையாமல் சிரமம் உண்டாகும்.

### குரு பகவான் வக்ர நிலையில் 03-03-2006 முதல் 04-06-2006 வரை

இக்காலத்தில் உங்களின் முன்னேற்றம வெகு சிறப்பாக அமையும். கடந்த கால சோதனைகள் யாவும் விலகிவிடும். மனதுல் நிம்மதி உண்டாகும். உடல்நலம் சீரடையும். மனைவி, குழந்தைகள் சுபட்சமாகக் காணப்படுவாாகள். குடும்பத்தில் தடைப்பட்ட தனவரவுகள் உண்டாகும. கடன் தொல்லைகள் குறையும். சிலருக்கு வரவேண்டிய பாக்கிகள் வந்துசேரும். அசையாச் சொத்து வகை செலவுகள் விலகி அனுகூலம் உணடாகும. தொழில், வியாபாரம் சிறப்பாக முன்னேற்றம் தரும். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடையில் நல்ல நம்பிக்கை, நாணயம் உருவாகும். உத்தியோக நிலையில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் தடை விலகி வந்து சேரும். புதிய வேலை கிட்டும். மாணவர்கள் கல்வியில் ஏற்றம் பெறுவார்கள். அரசியலில பெயர், புகழ் கூடும் காலமாகும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 05-06-2006 முதல் 18-08-2006 வரை

உங்களின் உடல்நலம் சிறு சிறு உஷ்ண சம்பந்தமான கண் எரிச்சல், வயிற்றுவலி போன்றவற்றால் பாதிப்படையும். சிறிது மருத்துவச் செலவுகளை ஏற்க நேரிடும். மனைவி, குழந்தைகள் படிப்படியான ஆரோக்கியத்தை அடைவார்கள். கணவன் -மனைவியிடையே சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பெருமளவில பாதிப்பு இருக்காது. திருமணம் சார்ந்த முயற்சிகளைத் தாராளமாக மேற்கொள்ள முடியும் பொருளாதார நிலையில் சிறு சிறு தடை, தாமதங்கள் அமைந்தாலும் சமாளித்துவிட முடியும. வீடு, மனை, வண்டி, வாகனத்தின் பேரில் சில முயற்சிகள் எடுக்க நேரிடும. சிலருக்கு மறைமுக எதிர்ப்புகள் உண்டானாலும் அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்வீகள். உத்தியோகநிலையில் கோபதாபம காட்டாமல் பொறுமையைக் கையாண்டு அனைவரையும் அனுசரித்துப் போனால சிறப்பான அனுகூலப் பலனை அடைய முடியும். மாணவர்களின் கல்வியில் மந்தமான நிலைகள் விலகி ஏற்றமான பலன்கள் ஏற்படும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 19-08-2006 முதல் 20-10-2006 வரை

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். புத்திரர்களின் வழியில் சிறிதளவு மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். மனைவியின் உடல்நலம் சீரடையும். சிலருக்கு தாமதித்து புத்திர பாக்கியம் அமையும். மூத்த சகோதரி வழியில் சுப செய்தியைப பெறுவீகள். ஸ்திர சொத்துக்களின் பேரில செலவுகள் ஏற்பட்டாலும் அனுகூலப் பலனை ஏற்படுத்தும். கூட்டுத் தொழில் சிறப்படையும். உத்தியோக நிலையில் பதவி உயர்வுகளை இக்கால கட்டத்தில் எதிர்பார்க்க வழியில்லை. அரசு மூலம் ஏற்படும சோதனையையும் மறைமுகப் போட்டி, பொறாமைகளையும் எளிதில் சமாளித்து விடுவீர்கள். சிலருக்குப் புதிய வேலை அமையத் தாமதமாகும். எனவே இருக்கும வேலையை விட்டுவிட வேண்டாம். பெண்கள மனக்கவலை நீங்கி படிப்படியாக ஏற்றத்தை அடைவர்கள். குடும்ப வாழ்வில் கணவன் -மனைவியிடையே இதுவரை இருந்த குழப்பமான நிலைகளும் விலகி ஒற்றுமை உண்டாகும. சில சமயம் அலைசசல், டென்ஷன் ஏற்படலாம். நீண்ட நாள்களாக இழுத்து வந்த கோர்ட் கேஸ்கள் சற்றே சாதகமான பலனை ஏற்படுத்தும். உங்களுக்கு நெருக்கமானவர்களால் சிறிதளவு உதவி அமையும். மாணவர்கள் கல்வியில் சுமாரான மதிப்பெண் பெறுவீர்கள்.

### நட்சத்திரப் பலன்கள்

**சித்திரை 3 , 4 ஆம் பாதங்கள்:**

நீங்கள் இக்காலத்தில் நிதானமாக செயல்படுவது நல்லது. தேவையற்ற அலைச்சல், டென்ஷன், தூரப் பயணங்களால் அனுகூல மற்ற நிலை யாவும் உண்டாகும். மனதில் எதிலும் ஒரு தெளிவான முடிவை எடுக்க முடியாதபடி குழப்பமும் சோர்வும் அமையும். பொருளாதார நிலையில் தடைகளும் தாமதமும் கடன்களும் ஏறபடும்.

**ஜோதிட மேதை**
**பாலமுருகன்**

**சுவாதி:**

செலவுகளைச் சிக்கனமாகச் செய்தால் நிலைமையைச் சமாளிக்க முடியும். திருமண சுபகாரிய முயற்சிகள் தடைப்படும் என்றாலும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில போட்டி, பொறாமைகளைச் சந்தித்தாலும் ஓரளவுக்கு இலாபம் ஏற்படும். அரசியலில் உள்ளவர்களுக்குப் பதவியில் நெருக்கடிகள் உண்டாகும். வீண் கெட்ட பெயரைச் சம்பாதிக்க நேரிடும்.

**விசாகம் 1 , 2, 3 ஆம் பாதங்கள்:**

எதையும் ஒருமுறைக்கு பலமுறை சிந்திததுச் செயல்பட வேண்டிய ஆண்டாகவே உள்ளதால் பெரியவர்களைக் கலந்தாலோசித்துச் செயல்படுங்கள். உத்தியோக நிலையில் பதவி, ஊதிய உயாவு தாமதப்படும். புதிய தொழில் தொடங்குவது, ஜாமீன் தருவது போன்றவற்றினைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிட வேண்டும். மாணவர்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**பரிகாரம்:**

உங்கள் ஜென்ம இராசியில் குருபகவான் சஞசரிப்பதால் வியாழக்கிழமையன்று விரதம் மேற்கொள்வது, குரு தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமைகளில் மஞ்சள் துண்டு, கொண்டைக்கடலை மாலை, முல்லை மலர்மாலை சாற்றி வழிபாடு செய்வது, ஏழை பிராமணர்களுக்கு உங்களால் இயன்ற பொருளுதவிகள், ஆடை தானம் செய்வதாலும் உங்கள சோர்வுகள் விலகி படிப்படியான ஏற்றம் உண்டாகும். உங்களுக்கு தொழில் ஸ்தானமான 10இல் சனி பகவான் சஞ்சரிப்பதால் தொடர்ந்து சனி பகவானை வணங்கி வழிபட்டு வாருங்கள். உடல் ஊனமுற்றவர்களுக்கு அன்னதானம், காக்கைக்கு உணவு அளிப்பது போன்றவை உங்களுக்கு வரும் சோதனைகளை விலக்கும்.

(தொடரும்...)

# யாழ்.இந்து மாணவர் (உ/த) பரீட்சையில் சாதனை



சபாநாதன் தனேசன்

(நேற்றைய தொடர்ச்சி...)

இதேபோன்று யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் நாகேந்திரம் பானுகோபன் கணிதப் பிரிவில் மூன்று 'ஏ' எடுத்து இலங்கை ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்று சாதனை நிகழ்த்தியுளளார்.



நாகேந்திரம் பானுகோபன்

அகில இலங்கை ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்ற பானுகோபனை செவ்வி கண்ட போது,

அளவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட பானுகோபன் தனது ஆரம்பக் கல்வியை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளை எடுத்து யாழ்.இந்துக் கல்லூரியில் நுழைந்து கல்வியைத் தொடர்ந்து வந்தார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில ஐந்து 'ஏ' சித்தியையும், நான்கு 'பி' சித்தியையும், ஒரு 'சி' சித்தியையும் பெற்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில கணிதப் பிரிவில் கற்று மூன்று 'ஏ' எடுத்து இச் சாதனையைய நிகழ்த்தியுள்ளார்.

இப் பெறுபேறு எடுத்தமை தொடர்பாக பானுகோபன் தெரிவிக்கையில்,

பாடசாலையிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் கற்பித்த பாடங்களை அன்றைய தினமே க்ற்று வந்தேன். இதனால் அப்போது எழும் சந்தேகங்களை மறுநாள் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வேன். மேலும் கடந்த கால வினாவிடைப் புத்தகங்களை எடுத்து தினமும் பயிற்சிகளை செய்து வந்ததனாலுமே இப்பெறுபேற்றை பெறமுடிந்ததாகத் தெரிவித்தார். அத்துடன் தற்போது கூடுதலாக மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே மூழ்கியிருக்கின்றார்கள். ஆனால் தான் கல்வி கற்கும் போது தொலைக்காட்சி பார்ப்பதையே தவிர்த்துக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

## நல்ல வழிகாட்டலும் விடாமுயற்சியும் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இதேபோன்று யாழ்ப்பாணம இநதுக் கல்லூரியைச் சேர்ந்த சபாநாதன் தனேசன் கணிதப் பிரிவில் மூன்று 'ஏ' சித்தியினைப் பெற்று அகில இலங்கை ரீதியில் ஐந்தாம் இடத்தினைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

இப் பெறுபேற்றினைப் பெற்ற தனேசனை செவ்வி கண்ட போது,

சுதுமலையை சொந்த இடமாகக்கொண்ட தனேசன் தனது ஆரம்பக் கல்வியை சுதுமலை சிம்மயபாரதி வித்தியாலயத்தில் கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று யாழ்.இந்துக் கல்லூரியில் நுழைந்து கல்வியைத் தொடர்ந்து வந்தார்.

இம் மாணவன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒனபது 'ஏ' சித்தியினையும் ஒரு 'சி' சித்தியினையும் பெற்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று மூன்று 'ஏ' எடுத்து இச் சாதனையை நிகழ்ததியுள்ளார்.

இச் சாதனை தொடர்பாக தனேசன் தெரிவிக்கையில்,

பாடசாலைகளிலோ, அல்லது தனியார் கல்வி நிறுவனங்களிலோ ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் போது அதை நன்றாக அவதானித்து அவ்விடயங்களை மனதில பதியவைத்தல் வேண்டும்.

இவ்வாறு வகுப்பறையில் கற்பிக்கும் போது நன்றாக அவதானித்தால் வீட்டில் படிப்பதற்கு அதிக நேரம் ஒதுக்கத் தேவையில்லை.

இதேவேளை வீட்டில் எவ்வளவு நேரம் படிக்கின்றோம் என்பது முக்கியமில்லை. சிறிதளவு நேரம் படித்தாலும் அதை மன ஒரு நிலைப்படுத்தி எண்ணங்களை வேறு இடங்களுக்குச் செல்லவிடாது கல்வி கற்றால் பயனுடையதாக இருக்கும். இவ்வாறு நான் கற்றதனாலேயே இச் சாதனையை புரியக் கூடியதாக இருந்தது என்றார்.

இவ்வாறு சிறந்த பெறுபேறுகளை அகில இலங்கை ரீதியில் பெற்று யாழ். இந்துக் கல்லூரிக்கு வரலாறு காணாத அளவில் பெருமையைத் தேடித் தந்த இம் மாணவர்களுக்கும மற்றும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கும் யாழ்.இந்துக்கல்லூரி

செவ்வி: ஞா.ஐங்கரன்

சமூகம் வாழ்த்துத் தெரிவிப்பதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில இம் மாபெரும் சாதனை புரிந்து பாடசாலைக்கும், யாழ். மாவட்டத்திற்கும் பெருமை தேடித்தந்த இம் மாணவர்களுக்கும் மற்றும் சிறந்த பெறுபேறுகள் எடுத்த மாணவர்கள் அனைவருக்கும் வலம்புரி பத்திரிகை நிறுவனம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது. □

# தேசிய முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் இல்லம் மீது தாக்குதல்

(கொழும்பு)

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எச்.எம்.ஹாரிசின் கொழும்பு, தெகிவளை இல்லம் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு உள்ளானது.

இச் சம்பவத்தின் போது அவரோ அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர்களோ வீட்டில் இல்லை. வாகனமொன்றில் வந்த நபர்கள் வீட்டின் கதவு, யன்னல்களை உடைத்து சேதமாக்கியதோடு உள்ளே புகுந்து அலுமாரிகளைத் திறந்தும், பெட்டிகளைத் திறந்தும் ஏதோ ஒரு ஆவணத்தைத் தேடி அதனை எடுத்துச் சென்றுள்ளதாகவும கூறப்படுகின்றது.

அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள உட்பூசல் தற்போது வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எச்.எம்.ஹாரிஸ் மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு தாவுவதற்குத் தன்னைத் தயார்படுத்தி அது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்ற நேரத்திலேயே இச்சம்பவம் நடந்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு காத்தான்குடியில் தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதிச் செயலாளர் நாயகம் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் பிரசார கட் அவுட்கள் அனைத்தும் இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

'மகனே நீ இல்லாத அருமை சுனாமி வந்த பின்பு தான் தெரிந்தது' எனக் குடும்பப பெண்களின் புலம்பலை வெளிப்படுத்தும் வகையில் இந்த கட்அவுட்கள் அமைக்கப்பட்டிருந் தன.

கடந்த பொதுத் தேர்தலில் தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டு தோலவியடைந்த இவர் மீண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்குள் நுழைவதற்கு தயாராகிவிட்டார்.

அடுத்த பொதுத் தேர்தலை இலக்கு வைத்து பிரசாரத்திலும் தற்போது ஈடுபட்டு வருகின்றா என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

## தெற்காசியாவில்
# கல்வித்துறையில் இலங்கை முன்னிலை வகிக்கின்றது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் 2005ஆம ஆண்டிற்கான மனித அபிவிருத்தி அறிக்கையின் படி தெற்காசிய வலயத்தில் முன்னணியிலுள்ள நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டம் அறிக்கையை கடந்த வாரம் வெளியிட்டது. இந்த அறிக்கையின படி மனித அபிவிருத்தி 177 நாடுகளில் இலங்கை 93ஆவது இடத்தில் உள்ளதுடன் ஆயுள் காலத்தில் இலங்கை 51 ஆவது இடத்தை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயுள் காலத்தைப் பொறுத்தவரை யபபானே முதலிடம் வகிக்கின்றது. கல்வித் துறையில் தெற்காசியாவில் முன்னணியிலுள்ள நாடு இலங்கையாகும்.

ஐக்கிய நாடுகள் மனித அபிவிருத்தி செயற்திட்டம் வெளியீட்டுள்ள அறிக்கையில் மனித அபிவிருத்தியில் நோர்வே முன்னணியில் உள்ளது.

ஐஸ்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ளன.

இதேவேளை, பெண்கள் நலன் தொடர்பாக தெற்காசிய வலயத்தில் இலங்கை முன்னணியில் உள்ளது. தொழில்சார் மட்டத்தில் பெண்களின் பங்களிப்பு விடயத்தில் இலங்கை 56ஆவது இடத்திலுள்ளது.

(த-9)


## SRI LANKA RED CROSS SOCIETY
## JAFFNA DISTRICT
### in conjunction with the Australian Red Cross

VACANCY FOR ORGANISATIONAL DEVELOPMENT OFFICER

We are seeking for a motivated person with qualifications and demonstrated experience in the area of management or human resource development or social development to assist the Organisational Development Delegate of the Australian Red in implementing the Organisational Development project. The successful candidate will assist the delegate in conducting trainings/workshops and provide the logistical arrangement for the trainings.

*Duties applicable:*

1. Work towards the achievement of Sri Lankan Red Cross (SLRCS) and Australian Red Cross (ARC) goals through effective relations and teamwork

2. Ensure understanding of roles, responsibilities, lateral relationships and accountabilities

3. Perform other work related duties and responsibilities as may be assigned by the supervisor.

*Specific responsibilities and accountabilities*

1. Contribute as principle process facilitator in participative processes with Branch staff, volunteer and Committee members to develop a vision, mission statement, formulate and prioritise objectives and realised stakeholders as well as a SWOT – analysis.

2. Contribute as principle trainings facilitator in participative project planning process and arrange for the staff and volunteers skill training by the third training organisations.

3. Contribute in the development of the Branch Development plan.

4. Contribute to the implementation of trainings and other activities contained in OD project proposal and in contracting the third party for this purpose as needed.

5. Organise the logistical arrangement for OD trainings and workshops.

6. Assist in any other duties that may be assigned.

7. Assist the OD Delegate in the areas of language translation and interpretation, as well as interpretation of sensitive issues relating to cultural, social, and political issues.

*Qualification:*

*Degree or Diploma in Management/ Development or equivalent community focussed education.
*Minimum 5 years experience with working with similar work.
*Excellent English both spoken and written.
*Experience as Red Cross volunteer is an asset.

Applications should be sent under registered mail before 20th September 2005 to:
Branch Executive Officer
Sri Lanka Red Cross Society, Jaffna Branch, No. 73, Kandy Road, Jaffna.

*Very competitive salary will be offered to successful applicant*

[C/1639]

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் 19

6. விசாரணை என்ற பெயரால் அழைத்துச் செல்லப்பட்டு (மேற்சொன்ன மனித உரிமை மீறல்' வழக்குகளில் சிக்கவைக்கப்பட்டு) கர்நாடகச் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கும் அப்பாவி மக்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

7. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒன்பது [illegible]ர் கொலை செய்யப்பட்டிருக் கிறார்கள். அவர்களுக்கு [illegible]ரிய நஷ்ட ஈடு தரப்படவேண்டும்.

8. நீலகிரி மாவட்டத்தில், ஒரு கிலோ தேயிலைக்கான குறைந்த பட்ச கொள்முதல் விலை ரூபா 15 என்று நிர்ணயிக்கப்பட வேண்டும்.

9. தமிழகச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் வெங்கடேசன், முத்துக்குமார், பொன்னி வளவன், சத்திய மூர்த்தி, மணிகண்டன் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

10. மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினைக்கு உடனடித்தீர்வு காணப்படவேண்டும். தமிழகம் மற்றும் கர்நாடகத்தில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்கள் அனைத்திலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் 150 ரூபாய் என்ற அளவில் சம்பளம் தரப்படவேண்டும்.



ஏதோ அரசியல் கட்சியின் தேர்தல் அறிக்கை போல, இப்படி நீளமாக ஒரு கோரிக்கைப் பட்டியலை அனுப்பிய பின், இதில் இல்லாத இன்னொரு விஷயத்தையும் வீரப்பன் கேட்டிருந்தான். என்று கர்நாடகக் காவல் துறைத்தலைவராக இருந்த சி. தினகர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் 'பதினொன்றாவது' கோரிக்கையை, வெளியே யாருக்கும் சொல்லாமல், ரகசியமாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று வீரப்பன் சொல்லியிருக்கிறான்.

வீரப்பனின் அந்த 'ரகசிய'க் கோரிக்கையின்படி அவனுக்கு ஐம்பது கோடி ரூபாய் பணம் வேண்டும். ஒரு வேளை, தன்னுடைய தம்பி அர்ச்சுனன் உயிரோடு இருந்திருந்தால், அவனை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டிருப்பானாம். அர்ச்சுனன் (போலீஸ் காவலில் இருந்த போது) இறந்துவிட்டதால், ஐம்பது கோடி ரூபாய் கேட்கிறானாம்.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் முறைப்படி நிறைவேற்றினால் தான், ராஜ்குமாரை விடுதலை செய்ய முடியும். மற்றபடி, போலீஸையோ, இராணுவத்தையோ அனுப்பி ராஜ்குமாரை மீட்டுவிடலாம் என்று நினைத்தால், பிரச்சினை உங்களுக்குத்தான் என்று மிரட்டியிருந்தான் வீரப்பன்.

உண்மையில், ராஜ்குமாரை வீரப்பன் விடுதலை செய்வதற்குப் பணம் கேட்டானாம் இல்லையா என்பது இன்று வரை பரபரப்பாக விவாதிக்கப்படும் விஷயம். ஆகவே, இப்போதைக்கு அந்த விஷயத்தைத் தவிர்த்து, மற்ற கோரிக்கைகளில் கவனம் செலுத்துவோம்.

இத்தனை ஆண்டுகளாக, வீரப்பன் பலரைக் கடத்தியிருக்கிறான். அப்போதெல்லாம், அவர்களை விடுவிக்க வேண்டும் என்றால் பொதுவாக இரண்டு விஷயங்களைத்தான் கேட்பான் அவன்.

ஒன்று, தனக்கும் தன்னுடைய தோழர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கவேண்டும் அல்லது குறிப்பிட்ட அளவு பணம் தரவேண்டும்.

இப்படி 'சுயநலக் கடத்தல்களில் மட்டும் ஈடுபட்டிருந்த வீரப்பன், திடுதிப்பென்று பொதுநலவாதியாகி, தமிழர் நலனுக்காகப் போராடத் தொடங்கி விட்டானே, இது எப்படி? இந்தப் புதிருக்கான விடை, அப்போது வீரபபன் கோஷ்டியுடன் நெருக்கமான தொடர்பில் இருந்த சிலரிடம் உள்ளது. வெறுமனே காட்டுவாசியாக இருந்த வீரப்பனுக்கு அவர்கள்தான் அரசியல் ஆர்வங்களைத் தூண்டி விட்டிருக்கிறார்கள் என்று போலீஸ் நம்பியது.

பல ஆண்டுகளாக இரணடு மாநிலக் காவல்துறையினருக்குத் 'தண்ணி' காட்டிக் கொண்டிருக்கும் வீரப்பனுக்கு அப்போது சில புதிய தோழர்கள் கிடைத்திருந்தார்கள். தமிழ் தேசியம் கோரும் பல தவீரவாத அமைப்புக்களைச் சேர்ந்த இவர்களையும் போலீஸ் மும்முரமாகத் துரத்திக் கொண்டிருந்தது. ஆகவே, மழைக்கு பயந்து சாலையோரமாக ஒதுங்குவது போல், காவல்துறையின் கண்ணில் படாமல் இருக்க வேண்டும். என்பதற்காக அவர்கள் வீரப்பனிடம் தஞ்சம் புகுந்ததாகத் தெரிந்தது.

தங்களின் தீவிரவாத நடவடிக்கைகளுக்காக, போலீஸால் துரத்தப்பட்ட இவர்களுக்கு, வீரப்பன் காடு சொர்க்க லோகமாகத் தெரிந்திருக்கவேண்டும். வீரப்பனின் நிழலில் உள்ளவரை, தங்களை யாரும் நெருங்கிவிட முடியாது என்று அவர்கள் தெம்பாக உணர்ந்தார்கள்.

இப்படி வந்தவர்கள், சும்மா ஓர் ஓரத்தில் இருந்துவிட்டுப் போகாமல், வீரப்பனோடு நேரடியாகப் பேசி, அவன் மனத்தில் பல புதிய எண்ணங்களை விதைத்தார்கள். பிரபல லத்தீன் அமெரிக்கப் புரட்சியாளர் சேகுவேரா, கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ உள்ளிட்ட பல புரட்சியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை வீரப்பனுக்குச் சொல்லி அவர்களைப் போல் தைரியமும் நியாயச் சிந்தனையும் கொண்ட வீரப்பன், தமிழர்களின் மேம்பாட்டுக்காகப் போராடவேண்டும் என்று அவர்கள் தூண்டினார்கள்.

'வடக்கே ஒரு சம்பல் கொள்ளைக்காரி பூலான்தேவி பாராளுமன்ற உறுப்பினராக முடியும் என்றால், வீரப்பனும் அரசியலில் இறங்குவதில் என்ன தப்பு?' என்பது அவர்களின் வாதம். இதைக் கேட்டுச் சபலம் கொண்ட வீரப்பன், உலகத் தமிழர்களின் பிரதிநிதியாகத் தன்னை எண்ணிக் கொள்ளத் தொடங்கிவிட்டான். இந்தக் காலகட்டத்தில் வீரப்பனைச் சந்திப்பதற்காகச் சென்ற 'நக்கீரன்' கோபால் உட்பட, பலரும் இதுபற்றி வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்கள்.

அதன்பின், வந்தவர்களின் திட்டப்படி, மெல்லமெல்ல வீரப்பனின் மீதும் அவனுடைய கூட்டத்தார் மீதும் இந்தப் புதியவர்களின் ஆதிக்கம் அதிகமானது. தாம் சார்ந்த இயக்கங்களின் கொள்கைகளை எல்லாம், வீரப்பனுடைய சிந்தைக்குள் திணித்தார்கள் அவர்கள். அதன் உச்சக்கட்ட வெளிப்பாடு தான், இந்தக் கோரிக்கைப் பட்டியல். வீரப்பன் கேட்கிறான் என்ற போர்வையில், வேறு சிலர் தான் இந்தப் பட்டியலைத் தயாரித்திருக்க வேண்டும் என்று பல பத்திரிகையாளர்களும், அரசியல் விமர்சகர்களும் கருதினார்கள்.

எது எப்படியோ, வீரப்பனின் கோரிக்கைகள் என்று ஒரு பட்டியல் வந்திருக்கிறது. அதை நிறைவேற்றினால்தான், ராஜ்குமாரை மீட்க முடியும். ஆகவே, இரு மாநில அரசுகளும் அந்தக் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலித்தன.

இவ்றறில் சில கோரிக்கைகளை ஏற்பதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால், தடா வழக்குகள், 'சதாசிவா கமிஷனு'க்கு எதிரான தடை வழக்கு உள்ளிட்டவை நீதிமன்ற விசாரணையில் உள்ளதால், அவற்றை உடனடியாக நிறைவேற்ற முடியாத நிலைமை.

என்றாலும், முடிந்தவரை விரைவாக, வீரப்பன் கேட்டதையெல்லாம் செய்வதற்கு முயன்றது கர்நாடக அரசு. வீரப்பனின் தோழர்கள் மீதான 'தடா' வழக்குகளை வாபஸ் பெறுவதற்கான அவசர முயற்சிகள் நடைபெற்றன. ராஜ்குமாரும், அவருடன் உள்ளவர்களும் வீரப்பனால் விடுவிக்கப்படும் போது, இவர்களும் விடுதலையாவர்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால், முன்னாள் காவல்துறை அதிகாரி அப்துல் கரீம், உச்ச நீதிமன்றம் வரை சென்று இதைத் தடுத்துவிட்டார்.

இப்படியாக, வீரப்பனின் பத்துக்கோரிக்கைளுக்கும், இரு மாநில அரசாங்கங்களின் விரிவான பதில்கள் தயாரிக்கப்பட்டு, தூதர் 'நக்கீரன்' கோபால் மூலமாக, வீரப்பனுக்கு அனுப்பப்பட்டன. வீரப்பன் கேட்டிருந்த அனைத்தையும் நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம் என்பதால், அவன் ராஜ்குமாரை விடுவித்துவிடுவான் என்று தான் எல்லோரும் நம்பினார்கள்.

(தொடரும்)


**SRI LANKA RED CROSS SOCIETY**
**JAFFNA DISTRICT**

**in conjunction with the Australian Red Cross**

**VACANCY FOR YOUTH / VOLUNTEER MANA GEMENT OFFICER**

We are seeking for a motivated person with qualifications and demonstrated experience in the area of volunteer management to work with the Organisational Development Delegate of the Australian Red and the Branch Executive Officer of the Srilanka Red Cross, Jaffna Branch. the successful candidate will set up volunteer managment system and regularly travel to Red cross District sub Branches and units to assist them in volunteer management.

**Duties applicable:**

1 .work towards the achievement of srilankan Red Cross (SLRCS) and Australion Red Cross (ARC) goals through effective relations and teamwork
2. Ensure understanding of roles, responsibilities, lateral relationships and accountabilities
3. Perform other work related duties and responsibilities as may be assigned by the supervisor.

**Specific responsibilities and accountabilities**

1. Implement activities including trainings and networking in youth and volunteer component of Organisational Devel opment plan and in according to the policies and procedures of volunteer management (VM)
2. Develop and implement a VM system at the Branch, District Sub-Branch and unit level.
3. Recruit youth volunteers, advisors and set up the com mittee.
4. Develop and volunteer database at the branch.
5. Prepare and circulate report on volunteer activities to rel evant bodies.
6. Be responsible for assuring sub branches and units regu larly update their database and send to branch to for ward to NHQ.
7. Set up system to recruit,train, retain and recognise volun teers.
8. Set up specialised volunteer service (SVS) system.
9. Monitor and evaluate implementation of VM policy implementing at the Brach level.
10. Ensure appropriate, consistent and fair treatment of all volunteers.
11. Develop, implement and maintain a SLRCS volunteers identification system.
12. Supervise and monitor activities of the volunteers.
13. Conduct quarterly review meetings with volunteers at sub branches.
14. Actively participated in meeting with the VM coordina tor at the NHQ.

**Qualifications:**

- Degree or Diploma in Social work or equivalent commu nity focussed education.
- Minimum 5 years experience with working with simi lar work.
- Excellent English both spoken and written.
- Experience as Red Cross volunteer is an asset.

Applications should be sent under registered mail be fore 20th September 2005 to:

**Branch Executive Officer**
**Sri Lanka Red Cross society, Jaffna Branch, No.73, Kandy Road,Jaffna**

** Very competitive salary will be offered to successful applicant **

(C/1639)


## குண்டுப புரளியை ஏற்படுத்தியது விமான நிலைய ஊழியாகள்?

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடந்த 8ஆம் திகதி ஏற்பட்டுள்ள குண்டுப்புரளி தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விமான நிலைய ஊழியர்களிடம் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். விமான நிலையத்தின் உள்ளே இருந்தே இந்த அனாமதேய தொலைபேசி வந்துள்ளதை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இதையடுத்து விமான நிலைய ஊழியர்கள் அனைவரிடமும் விசாரணை நடத்தி வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுவருகின்றது. விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரியிடம் நடத்திய விசாரணையில் தமக்கு அனாம தேய தொலைபேசி அழைப்பு வந்ததால் அவசரகால நட வடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தி னோம் எனத் தெரிவித்தார்.

புரளிக்குள்ளான சவூதிஅரேபிய விமானம் கொழும்பு விமான நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்த விமானம் மீண்டும் சோதனையிடப்பட்டு வருகிறது. இருப்பினும் இதர விமான சேவைகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றது. இசசம்பவம் குறித்து விமானப் படை அதிகாரி ஏர் மார்சல் டொனால்ட் பெரேரா கருத்துத்தெரி விக்கையில், அனைத்துப் பயணிகளின் உடமைகளும் முழுமையாக பரி சோதிக்கப்பட்டு மாற்றுவிமானம் மூலம் பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர் என்றார். இக் குண்டுப் புரளிகிளம்பியதால் விமானத்திலிருந்து அவசரமாகப் பயணிகள் இறங்கிய போது ஒரு பெண் உயிரிழந்தார். அவரது சடலம் நீர்கொழும்பு வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ள. இச்சம்பவத்தில 94 பயணிகள் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ந-4)

ஆற்றாரும் ஆற்றி அடுபஇடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

# மகிந்தவை நீக்க சுதந்திரக்கட்சி தயாரா?

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் மகிந்தராஜ பக்ஷவுக்குமிடையிலான முறுகல் நிலை உச்சம் பெற்றுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்திருந்தது. இத் தீர்மானம் சந்திரிகா குமாரதுங்கவிற்கு விருப்பமில்லாதவொன்றாயினும், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அதனை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. 2006ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம் என்ற சந்திரிகாகுமாரதுங்கவின் நினைப்பிற்கு பிரதமர் மகிந்தராஜபக்ஷ தடையாக இருந்தார்.

2005இல் ஜனாதிபதித்தேர்தலை நடத்திவிட வேண்டுமென்பது மகிந்தவின் முடிபு. அந்த முடிபு ஜனநாயகத்தின் மீது அவர் கொண்ட விசுவாசத்தால் எடுக்கப்பட்டதல்ல.

மாறாக, இந்த ஆண்டில் ஜனாதிபதித்தேர்தலை நடத்துவதன் மூலம்தான் அதில்வேட்பாளராக போட்டியிட முடியுமென்பதே அந்தமுடிபுக்கான காரணமாகும்.

பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் முடிபு ஜனாதிபதிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தாலும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆத்திரத்தை அடக்கி வாசிக்கச் செய்துவிட்டது.

அதேநேரம் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் வாசிப்பதற்கும் மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார். இந்த மறுப்பும் ஜனாதிப்தியை சூடாக்கியிருந்தது.

இவ்வாறு இரண்டு சம்பவங்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது. ஜனாதிபதிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தாலும், தற்போதைய 'அரசியல் காலம்' தனக்கு அவ்வளவாக நல்லதல்ல என்பதை சந்திரிகா குமாரதுங்க உணர்ந்திருந்தார். அரசியலில் தனக்கு முழுவிசுவாசியாக இருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மரணம்.

2005இல் ஜனாதிபதித்தேர்தலை நடத்திவிட வேண்டுமென்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இவையாவும் ஜனாதிபதியின் கெட்டகால அறிகுறிகளே. இதனால் அரசியலில் இருந்து துறவு பூண்டுவிடுவதே மேல் என்ற முடிபைக்கூட ஒரு கட்டத்தில் அவர் எடுக்கவேண்டிய நிலையில் இருந்தார்.

இதன் காரணமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக நிறுத்துவதற்கும் அவர் உடன்பட்டார். இந்த உடன்பாடு விருப்பமில்லாததாயினும் என் செய்வது என்ற நிலையில் அது நடந்து முடிந்தது.

ஜனாதிபதி வேட்பாளராக தான் போட்டியிட சந்திரிகா குமாரதுங்க அனுமதித்துவிட்டதற்கு தனது அரசியல் பலமும் செல்வாக்குமே முழுக்காரணமென பிரதமர் மகிந்த நினைத்துக்கொண்டார்.

அதனால் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். வேட்பாளராக நிறுத்துவதற்கு முன்னதாகவே தானே ஜனாதிபதியென மகிந்த நினைத்துக்கொண்டு அரசியல் செயற்பாடுகளை நகர்த்தினர்.

நட்டாற்றில் கைவிட்டுச்சென்ற ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதை ஜனாதிபதி மட்டுமல்ல, சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களும் விரும்பவில்லை.

இப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் மட்டும் இருந்த மகிந்தவின் பகைமை கட்சிக்குள்ளும் தாவியது. 'ஊருடன் பகைக்கின் வேருடன்கெடும' என்ற முதுமொழிக்கு அமைய மகிந்தவின் உறவு ஜனாதிபதி என்ற தனிநபர் கடந்து சுதந்திரக்கட்சிக்குள்ளும் பகையாகியது.

இதன் விளைவு சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதிவேட்பாளர் மகிந்த அல்ல என்ற முடிபை தடுக்குமா? என்பதே இப்போதைய நிலைமை.

# மஹிந்த-சந்திரிகா முறுகல் முற்றுகிறது ஸ்ரீ. சு. கட்சிக்குள் பெரும் குழப்பம்

## ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை வேட்பாளராக்க முடிவு?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் க்ட்சியின் தலைவியான சந்திரிகா குமாரதுங்கவுக்கும கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபகஷவுக்கும் இடையில் தோன்றியிருக்கும் முறுகல் நிலையால் கட்சிக்குள் பெரும் குழப்பநிலை தோன்றும் அறிகுறிகள் காணபபடுகின்றது.

சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மீறி கட்சியின்



ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன உடன்படிக்கை செய்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியிருப்பதுடன் அது தொடர்பாக விளககம் கேட்டு கடிதம் எழுதியிருப்பதும் இருவருக்கிடையில் முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

சுதந்திரக் கட்சியினால் அரசுத் தலைவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டவரான மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைமையில் முன் அனுமதி பெறாமலும் கட்சியின் மத்திய குழுவின் அங்ககாரம் பெறாமலும் தனிப்பட்ட ரீதியில் ஜே.விபியுடன் உடன்படிக்கை செய்திருப்பதாகவும் இது கட்சியன் யாப்பினை மீறும் நடவடிக்கை எனவும் இதுகுறித்து உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியன் சார்பில் தனியானதொரு வேட்பாளரை நிறுத்துவது குறிதது்ம் தீவிர ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது. முன்னாள் தலைமை அமைச் சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நிய மிப்பது தொடர்பாகவும் பரிசீலிக்கப்படு வதாக கட்சி வட்டாரங்கள் தொிவிக்கின் றன.



இது இவ்வாறிருக்க ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மீறி மஹிந்த ராஜபக்ஷ உடன்படிக்கை செய்து கொண்டது பிழையான செயல். எனவே கட்சியின் சார்பில் தனியானதொரு வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதை சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக் கும் இடதுசாரிக் கட்சிகள் மஹந்தவின் நடவடிக்கைகளை கடுமையாக எதிர்த்துள்ளனர்.

(ற)

# மஹிந்த-ஜே.வி.பி கூட்டு ஒப்பந்தத்தால் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன

## சுட்டிக்காட்டுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,ஜே.வி.பி தரப்பினருடன் ஏற்படுத்தியிருக்கும் ஒப்பந்தம் காரணமாக பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு கையளிக்கும் முன்னரேயே இப்படியான பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், எதிர்வரும் நாட்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மேலும் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் ஒன்றிணைந்து இப்படியான தேர்தல்களில் பங்குகொள்ளும் போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கடந்த காலங்களில் இதனை அனுபவ ரீதியாகப் பார்த திருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

(ற-4)

# மஹிந்தவுக்கே வெற்றி; ஜனாதிபதியின் மிரட்டல்கள் எதுவும் இனிமேல் எடுபடமாட்டாது -ஜே.வி.பி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி தற்போது உறுதிப்படுத்தபபட்டுவிட்டதால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மிரட்டல்கள் எதுவும் இனிமேல் எடுபடப்போவதில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மீறி அக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டமை குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருப்பது தொடர்பாக கருத்து வெளியிடும்போதே ஜே.வி.பி இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி மேற்கொண்ட மக்கள் கருத்துக்கணிப்பில் மஹிந்தவிறகான மக்கள் ஆதரவு அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்தோடு மஹிந்த சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது வேட்பாளரகவே போட்டியிடுகின்றார். எனவே, இங்கு ஜனாதிபதி கூறுவது போல எதுவித பிரச்சினையும் கிடையாது எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜாதிக ஹெறல உறுமய இதுபற்றி தெரிவிக்கையில், ராஜபக்ஷ என்ற தனிமனிதருடன் தான் தேசிய கொள்கைகளை வைத்து ஓர் இணக்கப்பாட்டினைக் கண்டுள்ளோம். இதன் அடிப்படையிலேயே உடன்படிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.எனவே சந்திரிகா குமர்துங்கவின் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடுகள், தீர்மானங்கள் எமக்கு அவசியம் இல்லையென ஜாதிக ஹெறல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிகக ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

(ற)

# மஹிந்தவுக்கு ஆதரவு தேடும் முயற்சியில் ஜே.வி.பி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு திரட்டுவதற்காக ஜே.வி.பியினர் வீடு வீடாகச் சென்று மக்களை சந்திக்கவுள்ளனர்.

மக்களுக்கு விளக்கங்களை வழங்கும் பொருட்டு துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளின் ஆரம்பத்திலும் பிரசாரங்களின் முடிவிலும் இரு கட்டங்களாக வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்திக்க திட்டமிடடுள்ளதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

(த-4)

# கலைஞர்களை ஊக்குவிக்க போதிய வசதிகள் இல்லை

(கொழும்பு)

ஆயிரம் அரசியல் பேச்சுக்களை நடத்துவதை விட அர்த்தபுஸ்டியான திரைப்படம் ஒன்று பெறுமதி மிக்கது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகைளயில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற திரைப்பட விருது வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலத்தில் பலவீனமாகக் காணப்பட்ட திரைப்படத் துறையினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு சந்தர்ப்பங்கள் தமக்குக் கிடைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திரைப்படத் துறையை முன்னேற்றுவதற்கான விசேட குழுவொன்றினை நியமித்ததாகவும் இக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய கடந்த காலங்களில் பல்வேறு செயற்பாடுள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் பல சிறந்த படைப்புக்ளை உருவாக்கக் கூடிய கலைஞர்கள் இருந்தபோதிலும் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளும் நிதியும் நாட்டில் இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதனை முன்னிட்டு கடந்த 10 வருட காலமாக அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுத்த போதிலும் அது போதுமானதாக இருக்கவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(த-9)

# செங்கல் உற்பத்தி

(கொழும்பு)

யுத்தம் காரணமாகப் பல தடவைகள் இடம்பெயர்ந்து புரிந்துணாவு ஒப்பந்தத்தின் பின்னர் தமது சொந்த இடத்தில் மீளக் குடியேறியுள்ள பூம்புகார் கிராம மக்கள் செங்கல் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் மூலம் தமக்கு மேலதிக வருமானத்தை ஈட்டக் கூடியதாக உள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் செங்கல் உற்பத்தியைத் தமது வாழவாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

தறபோது வவுனியா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வட்டுத் திட்டங்களுக்கென செங்கற்கள் பெருமளவில் கொள்வனவு செய்யப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துளளனர்.

(த-2)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

கண்ணை மூடிக்கொண்டு யாராவது ஒளி தாருங்கள் என்று கதறுகிறோம். முழு முட்டாள்களே! உங்கள் கண்களை விட்டுக் கைகளை எடுங்கள். செய்ய வேண்டுவது அவ்வளவே.

சுவாமி விவேகானந்தர்

## கரையொதுங்கிய சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் நேற்று முன்தினம் கரையொதுங்கிய சடலம் அடையாளம் காணப்பட்டது.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்டினர்.

நெடுந்தீவைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கூவுலிங்கம் (வயது 51) என்பவரது சடலமே அடையாளம் காணப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக் கடற்பகுதியில் கரையொதுங்கியதாகத் தெரிவித்து அழுகிய நிலையில் காணப்பட்ட சடலமொன்றை நெடுந்தீவுப் பொலிஸார் நேற்று முன்தினம் யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

# பல்கலைக்கழக அனுமதிகளுக்காக 15முதல் விண்ணப்பங்கள் கோரப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2006 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிகளுக்கென அடுத்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளது. இந்த வருடம் நடைபெற்ற க.பொ. த. உயர்தர பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமைபெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கமுடியும் என்று மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான விபரங்கள் தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்படவுள்ளது.

உயர் தரப்பரீட்சை முடிபுகள் யாவும் கடந்த 7ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களத்தினால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் அனுமதிகோரி கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் தொகையினை அடிப்படையாக வைத்து டிசம்பர் மாதம் 20 ஆம் திகதியளவில் வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்படுமென்று பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கும் அனுமதி நடைமுறைகளில் முதலில் யாழ். பல்கலைக்கழகத்திற்கான அனுமதி குறித்து பரிசீலனை செய்யப்படும்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான சகல பணிகளும் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது சகல பல்கலைக்கழகங்களுக்குமாக பத்தாயிரத்து 292 பேர் அனுமதிக்கப்படுவார்கள். இந்தத் தொகை கடந்தவருடம் அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகையிலும் பார்க்க ஆயிரத்து 442 பேரால் அதிகமானவையென பேராசிரியர் மெண்டிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பல்கலைக்கழகங்களில் புதிதாக 17 கற்கைநெறிகளை அறிமுகம் செய்வதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் பிரதமரின் பதிலை அனுப்ப ஏற்பாடு

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினருடன் மேற்கொண்ட உடன்படிக்கை குறித்து அதிருப்தியை வெளியிட்டு ஜனாதிபதி அனுப்பிவைத்த கடிதத்திற்கு உடனடியாகப் பிரதமர் பதில் அனுப்பமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நேற்று முன்தினம் தொடர்ச்சியான பல நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றிய போதிலும் ஜனாதிபதியினால் அனுப்பப்பட்ட கடிதம் குறித்து அவர் கருத்து எதனையும் கூறவில்லை.

ஐக்கியநாடுகள் சபைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நாடுதிரும்பியதும் பிரதமர் தனது பதில் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கை திட்டமிட்டபடி நடைபெறுவதாக பிரதமரின் சகோதரரும், தலைமைப் பிரசார முகாமையாளருமான வகுல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ச-9)

## நல்லூர் பிரதேசசபையின் உப அலுவலகம் நேற்று அடித்து நொருக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகம் நேற்று அடித்து நொருக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு கொக்குவில் பகுதியில் மாடு ஒன்று திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது. அதற்கு நல்லூர் பிரதேச சபை அனுமதி வழங்கியதைக் கண்டித்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

நேற்றுமதியம் ஒன்றுகூடிய கண்டனக்காரர்கள் பிரதேசசபை அலுவலகத்தின் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர். பிரதேசசபை வளாகத்தினுள் நின்ற மரங்களும் அவர்களால் தறித்து வீழ்த்தப்பட்டது. அத்துடன் கொல்களத்தின் கூரையில் போடப்பட்டிருந்த சீற்றுக்களும் அடித்து நொருக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன. இதனையடுத்து அப்பகுதியெங்கும் சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் சேதங்களையும் பார்வையிட்டுச்சென்றனர். (ச-19)

## திருமலையில் கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் அபயபுரச் சந்தியில் பொலிஸார் மீது நேற்றிரவு 9.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் பொலிஸார் ஒருவரும் பொதுமகன் ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

குணரட்ண என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் காயமடைந்தார். மற்றும் உபாலி என்ற பொதுமகன் படுகாயமடைந்து உயிராபத்தான நிலையில் திருகோணமலை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-4)

# ஒருகோடி பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் வைத்திருந்த இந்தியர் சுங்கப் பிரிவினரால் கைது!

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஒருகோடியே 60 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை இந்தியாவுக்குக் கொண்டுசெல்ல முயன்ற இந்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக மதுரைக்கு நேற்று அதிகாலை செல்லவிருந்த இந்தியர் மீது சந்தேகங்கொண்ட சுங்கப்பிரிவினர் அவரிடம் சோதனை மேற்கொண்டனர்.

கைதான நபர் 50 சவர்க்காரப் பெட்டிகளைக் கொண்டுசென்றுள்ளார். அதில் 29 பெட்டிகளில் இந்த நாணயங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

யூரோ, பவுண்ஸ், கொங்கொங் டொலர் மற்றும் சுவீடன், டென்மார்க், மலேசிய நாட்டு நாணயங்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சவர்க்காரப்பெட்டிகளை தனது நண்பர் இந்தியாவுக்குக் கொண்டுசெல்லுமாறு வழங்கியதாகவும், அதில் வெளிநாட்டு நாணயங்கள் இருந்த விபரம் தனக்குத் தெரியாது என்றும் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் சுங்கப்பிரவினரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-4,8)

## விசேட பூஜை

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையும், சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தின் எழுச்சி இயக்கத்தினது 25ஆவது நிறைவையும் முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (ற-4)

## புலிகளின் ...

உதவிக்காகச் சென்ற இரண்டு கிறிஸ்தவ மதகுருமார்கள் மற்றும் இவர்களை ஏற்றிச் சென்ற வாகன சாரதி ஆகிய 9பேரும் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் விடுதலைப் புலிகளினால் அரிப்புப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை விசாரணைசெய்த தமிழீழ காவல்துறையினர் ஆண்களான மூன்று பொலிஸாரை மாத்திரம் தடுத்து வைத்துக் கொண்டு ஏனைய ஆறு பேரையும் வாகனத்தையும் விடுதலை செய்ததாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 பொலிஸாரும் கிளிநொச்சிக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4,9)

## புலிகளை...

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரவேண்டியது சர்வதேச நாடுகளின் பிரதான கடமையாகவுள்ளதாக ஜயந்த தனபால வலியுறுத்தியுள்ளார். (ச-4)

## தேர்தல் வாக்களிப்பில் அடையாள அட்டையை கட்டாயமாக்கும் முறை ஒருவருட காலத்திற்கு ஒத்திவைப்பு

தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குவதை அரசாங்கம் ஒருவருடத்திற்கு ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டைகளுக்காக கிராமசேவை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒரு அடையாள அட்டைக்காக நாலு ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மின்சார நெருக்கடியை எதிர்நோக்குவதற்குத் தேவையான செயற்திட்டத்தைத் தயாரிக்கும் பொருட்டு அனல்மின் உட்பட மாற்றுவழி மின்வலு உற்பத்திக்காக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார். (த-9)

## வேலைநிறுத்த நாட்களை விடுமுறையிலிருந்து கழிக்கமுடிவு

ரயில் சாரதிகள் மேற்கொண்ட வேலைநிறுத்த நாட்களை அவர்களின் வருடாந்த விடுமுறையில் இருந்து கழிப்பதற்கு ரயில்வே அமைச்சு தீர்மானித்துள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் பிரியா டீ சில்வா தெரிவித்துள்ளார்.

வருடாந்த விடுமுறையில் இல்லாத வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட நாட்கள் ரயில் சாரதிகளின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும். அதேவேளை ஓய்வுபெற்ற எட்டு ரயில் சாரதிகளை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த எட்டு சாரதிகளும் ஒப்பந்த அடிப்படையிலேயே சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

A/L - 2006
DAY CLASS
(வர்த்தகப்பிரிவு)
இன்றுமுதல்
காலை 8.30
(C-1641)
DMI Jaffna







நிறைஞ்சனாஸ்
சங்கானை
சத்தியராஜ், நமீதா, வடிவேல் நடிப்பில்
இங்கிலிஷ்காரன்
கா.நே: 11.00,2.45,6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் ரோட். யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.